05th AUGUST 2024

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 42 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

# மத்திய கிழக்கில் அதிகரிக்கும் பதற்றம்; எந்த நேரமும் போர் மூழலாம்

## அமெரிக்கா, ரஷ்யா தலையீடு அதிகரிப்பு

மத்திய கிழக்கில் எந்த நேரமும் பாரிய போராட்டங்கள் வெடிக்கும் நிலை ஏற்படலாம் என உலக சமூகம் பெருமளவு அச்சம் கொண்டுள்ளது. குறிப்பாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் இஸ்மாயில் ஹனிய்யா ஈரானிய தலைநகர் தெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்டுள்ள மிகவும் முறுகலான நிலையானது, சர்வதேச ரீதியாக ஒரு உலக மகா யுத்தத்தை நோக்கி நிலைமைகளை நகர்த்திச் செல்லலாம் என்ற அச்சத்தினை பல மட்டங்களிலும் ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக ரஷ்யா ஈரானுக்கு 48 மணி நேரமாக தொடர்ந்து ஆயுதங்களை அனுப்பி கொண்டிருக்கின்ற அதே வேளை, மறுபுறம் இஸ்ரேலுக்கு அமெரிக்கா பாரியளவு

ஆயுதங்களையும், அதேபோன்று அமெரிக்காவின் 12க்கு மேற்பட்ட யுத்த கப்பல்களையும், பெருமளவான விமானங்களையும், அணு ஆயுதங்களையும் மத்திய கிழக்கை நோக்கி அனுப்புகிறது. இப்படியான

02ம் பக்கம்பார்க்க...

# கோரிக்கைகளுக்கு இணங்கினால் சஜித்துக்கு முழு ஆதரவு

## மு.க.உயர் பீடம் தீர்மானம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் சஜீத் பிரேமதாசவை ஆதரிக்கும்

கட்சியின் உயர்பீடத்தின் முடிவை தலைவர் ஹக்கீம் அறிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சஜீத் பிரேமதாசாவை ஆதரிப்பதாக நேற்று (4) கட்சியின் "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் உயர்பீடக் கூட்டத்தின் முடிவில் தலைவர் ரவூப் ஹக்கீம் அங்கு குழுமியிருந்த

04ம் பக்கம்பார்க்க...

# இன, மத பேதங்களின்றி நாட்டுக்காக ஒன்றுபடுங்கள்

## யாழ் ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதி

இன, மத பேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துடன் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள்

03ம் பக்கம்பார்க்க...

# முஸ்லிம் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக நவாஸ்

## 6ஆம் திகதி பதவியேற்பு!



கைத்தொழில் அமைச்சில் பணிபுரிந்த இலங்கை நிர்வாக சேவையை சேர்ந்த முஹம்மட் நவாஸ், முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பரக்காதெனியவைச் சேர்ந்த இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட

03ம் பக்கம்பார்க்க...

# இஸ்மாயீல் ஹனியாவுக்கு ஷஹீத் அந்தஸ்து கிடைக்கட்டும்

## ஜம்இய்யதுல் உலமா அனுதாபம்



1963ஆம் ஆண்டு காஸாவில் பிறந்த கலாநிதி இஸ்மாஈல்

02ம் பக்கம்பார்க்க...

# 34 வது தேசிய சுஹதாக்கள் தினம் அனுஷ்டிப்பு



(எம். பஹத் ஜுனைட்)

1990.08.03 அன்று இரவு காத்தான்குடியில் மஸ்ஜிதுல் ஹுஸைனியா மற்றும் மீரா ஜும்ஆ பள்ளிவாயல் ஆகியவற்றில் இரவு நேர தொழுகையில் ஈடுபட்டிருந்த 103 அப்பாவி பொதுமக்களை மனிதாபிமானமற்ற வகையில் இனப்படுகொலை செய்யப்பட்டு 34 வருடங்களாகும் நிலையில் அதனது ஞாபகார்த்த நிகழ்வுகள் சனிக்கிழமை (03) காத்தான்குடியில் 01 மீரா ஜும்ஆ ஆப் பள்ளிவாயல் மற்றும் ஹுஸைனியா

03ம் பக்கம்பார்க்க...

# பிரசன்ன, ரமேஷ், சந்திரசேன, காஞ்சனவின் அமைப்பாளர் பதவிகள் பறிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியதன் எதிரொலியாக பொதுஜன பெரமுனவின் முக்கிய அமைப்பாளர்களாக விளங்கிய அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, ரமேஷ் பதிரன, எஸ்.எம்.சந்திரசேன, காஞ்ஜன விஜேசேகர ஆகியோரின் மாவட்ட அமைப்பாளர் பதவிகள் பறிக்கப்பட்டுள்ளன.

02ம் பக்கம்பார்க்க...

# நீதியான தேர்தலை நடாத்துவதற்கு ஆணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கவும்

## பெப்ரல் அமைப்பு ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(ஐ.ஏ. காதிர் கான்)

மக்களுக்கு தங்களின் ஆட்சியாளரை நியமித்துக்கொள்ள இருக்கும் தடைகளை நீக்கி, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நியாயமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பெப்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்

04ம் பக்கம்பார்க்க...




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## இஸ்மாயீல்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*ஹனிய்யா (ரஹிமஹூல்லாஹ்) அவர்கள் பலஸ்தீன் சுதந்திரத்திற்காகப் போராடும் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர் ஆவார். மிகச் சிறந்த இராஜதந்திரியான அவர் தனது பிறந்தகமான பலஸ்தீனின் சுதந்திரத்திற்காகப் போராடும் அமைப்பின் அதிமுக்கிய பதவிகளை வகித்த, அதன் அரசியல் பிரிவுத் தலைவரும் ஆவார்.*

*2006 முதல் 2007 வரையிலான காலப்பகுதியில் ஜனநாயக ரீதியல் தெரிவுசெய்யப்பட்டு பலஸ்தீன் பிரதமராகவும் பின்னர் 2014 வரையில் காஸா பகுதியில் பதவி நீக்கம் செய்யப்பட்ட அரசாங்கத்தின் பிரதமராகவும் தொடர்ந்து பணியாற்றினார். தனது இளமைப்பருவம் முதல் தனது தேசம், சமூகம் என்பதற்காக அர்ப்பணித்தார்.*

*தனது தேசத்தின் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் குடும்பத்தில் பலரையும் மிலேச்சத்தனமான தாக்குதலில் இழந்து, ஈற்றில் அவரும் அவ்வாறானதொரு தாக்குதலில் ஈரானில் வைத்து வீர மரணமடைந்தார்.*

*(இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)*

*எதிர்பாராத விதத்திலான அவரது திடீர் இழப்பு, அரபு மற்றும் இஸ்லாமிய உலக முஸ்லிம்களையும் ஜனநாயக விரும்பிகளையும் ஆழ்ந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது.*

*அன்னாரது பேரிழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், பலஸ்தீன் மக்கள், போராட்ட அமைப்பின் தலைமையகம் மற்றும் சர்வதேச முஸ்லிம் உம்மாஹ்விற்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா இலங்கை ஆலிம்கள், இலங்கை முஸ்லிம்கள் சார்பில் அதன் ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ்வாறான மிலேச்சத்தனமான தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிக்கிறது.*

*அத்துடன், இலங்கைக்கான மேன்மைதங்கிய ஜனாதிபதி, எதிர்கட்சித் தலைவர் மற்றும் பல அரசியல் கட்சித் தலைவர்கள் இத்தாக்குதலைக் கண்டித்துள்ளமையை வரவேற்கிறோம்.*

*எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரையும் அவருடன் படுகொலை செய்யப்பட்ட மெய்ப் பாதுகாவலரான வஸீம் அபூ-ஷஃபான் அவர்களையும் ஷஹீதுகளுடன் சேர்த்து, உயர்ந்த பதவிகளை சுவனத்தில் வழங்குவானக! அவர்களது நற்காரியங்களை ஏற்று, குற்றங்களை மன்னித்து அவர்களது பேரிழப்பால் துயருற்றிருக்கும் குடும்பம், நாட்டு மக்கள், அபிமானிகள் அனைவருக்கும் பொறுமையையும் ஆறுதலையும் அருள்வானாக!*

*பலஸ்தீன் மக்கள் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கான அவர்களது நியாயமான அனைத்து எதிர்பார்ப்புகளும் கிட்டுவதற்கும் அல்லாஹ் பேருதவிகள் செய்திடுவானாக!*

## பிரசன்ன...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

*இதன்படி, கம்பஹா மாவட்ட அமைப்பாளராக இருந்த பிரசன்ன ரணதுங்கவுக்குப் பதிலாக இராஜாங்க அமைச்சர் இந்திய அனுருத்த, அநுராதபுர அமைப்பாளராக இருந்த எஸ்.எம்.சந்திரசேனவுக்கு பதிலாக நாமல் ராஜபக்க்ஷவும் காலி மாவட்ட அமைப்பாளராகவிருந்த அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்குப் பதிலாக மொஹான் பிரியதர்ஷன டி சில்வாவும் மாத்தறை அமைப்பாளராக இருந்த காஞ்சன விஜயசேகரவுக்க்குப் பதிலாக நிபுணு ரணவக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கச் சென்றமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது*

## மத்திய...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

மிகவும் பதற்றமான சூழ்நிலையில் இவ்வாறான யுத்த நிலைமைகள் எப்படியான விளைவுகளை உலக மக்களுக்கு ஏற்படுத்தும் என்ற முன்னெச்சரிக்கையுடன் அனைத்துலக நாடுகளும் செயற்பட வேண்டும்.

உடனடியாக ஈரான் இஸ்ரேலை நோக்கி தாக்குதல் நடத்தும் என எதிர்பார்த்தாலும் மொத்த இஸ்ரேலிய அமைச்சர்களும் மக்களும் பதுங்கு குழியில் உள்ள நிலையில் தற்போதைக்கு தாக்குதலை தாமதப்படுத்துவதானது இஸ்ரேலை உளவியல் ரீதியாக பெருமளவுக்கு பலவீனப்படுத்தியுள்ளது. அதே நேரம் ஜோர்தான் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகள் ஈரானிடம் பதில் தாக்குதல் நடந்த வேண்டாம் எனவும் அதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பயங்கரமானது எனவும் அறிவித்திருந்த போதிலும் சகல முயற்சிகளையும் ஈரான் நிராகரித்துள்ளது. இந்நிலையில் ஜோர்தானிய வெளிவிவகார அமைச்சர் தனது நிலைப்பாட்டை விளங்க வைப்பதற்காக அவசர அவசரமாக தெஹ்ரான் சென்றுள்ளார்.

எகிப்திய அரசாங்கமும் ஜோர்தான் அரசாங்கமும் இஸ்ரேலை நோக்கி ஏவப்படும் எந்த ஒரு ஏவுகணையையும் தமது நாடு சுட்டு வீழ்த்தும் என அறிவித்துள்ளமை அந்த நாட்டு மக்களிடையே பெருமளவு அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளதுடன், ஜோர்தான் தலைநகரத்தில் இஸ்ரேலிய தூதரகத்திற்கு முன்பாக மிக மோசமான ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. அரபு நாட்டு தலைவர்கள் இதன் விளைவு மிக பயங்கரமாக இருக்கும் என்பதை உணர்ந்து எந்த வகையிலாவது ஈரான் இஸ்ரேலிய யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று பாரிய முயற்சி செய்து வரும் நிலையில் ஈரானிய அமைச்சர் ஒருவர் தங்களிடம் சக்தி வாய்ந்த 11 அணுவாயுதங்கள் இருப்பதாக அறிவித்திருப்பது பிராந்தியத்தில் மேலும் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதேநேரம் ஹிஸ்புல்லா மற்றும் ஈராகில் போராடுகின்ற போராட்ட அமைப்புக்கள், சிரியாவில் போராடுகின்ற போராட்ட அமைப்புகள் பிராந்தியத்தில் அமெரிக்க நிலையங்களைத் தாக்குவதற்கு தங்களுக்குள் ஒருங்கிணைப்பு ஒப்பந்தம் ஒன்றை கைச்சாற்றி உள்ளனர். இதில் அனேகமான அமைப்புகள் ஈரானின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்ற அதே வேளை, இவை ஈரானின் மொத்த வழிகாட்டலின் கீழ் வழி நடாத்தப்படுவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. ஈரான், தான் பதிலடி வழங்கப் போவதாக ஐ.நா. சபைக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில் லெபனானில் இருந்தும் இஸ்ரேலிலிருந்தும் மக்கள் சாரை சாரையாக வெளியேறுகின்றனர். குறிப்பாக வெளிநாட்டு அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு ராஜதந்திரிகள் அவசர அவசரமாக இரு நாடுகளை விட்டும் வெளியேறுகின்றனர். பல நாடுகள் இருநாட்டவர்களையும் வெளியேறுமாறு வேண்டிக் கொண்டதோடு பல நாடுகள் அவ்விரு நாடுகளுக்குமான விமான சேவைகளையும் ரத்து செய்துள்ளது. யுத்தம் ஒன்று ஏற்படும் பொழுது அது மொத்த மத்திய கிழக்கிலும் ஒரு பாரிய சிக்கலான கொந்தளிப்பான நிலையை தோற்றுவிக்கும் என பல அரசியல் ஆர்வலர்கள் பொதுவாக கருத்து தெரிவித்த நிலையில் இது பெரும் உலக மகா யுத்தமாக உருவெடுக்கும் என பல தரப்பில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மறுபுறம் காஸாவின் றபா பகுதியில் இஸ்ரேலிய படைகளுக்கெதிராக ஹமாஸ் உக்கிரமாக போராடி வருகிறது. மேலும், ஹமாஸ் பல இடங்களில் இஸ்ரேலிய தாங்கிகளை அழித்திருப்பதுடன் சற்றும் எதிர்பார்க்காத விதமாக 302 நாட்கள் கடந்த நிலைமையிலும் இஸ்ரேலின் மீது தொடர்ந்தும் ரொக்கத் தாக்குதல்களை நடாத்தி வருவது இஸ்ரேலிய சமூகத்தில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது. தமது அரசாங்கம் எல்லாம் முடிந்து விட்டது சகலரும் அழிக்கப்பட்டு விட்டனர் என்று கூறினாலும் இப்போதைக்கு அவ்வாறான ஒரு நிலை இல்லை என இஸ்ரேலிய சமூகத்தில் ஒரு பலத்த சந்தேகத்தை உண்டாக்கியுள்ளது. இன்று அதிகாலை ஏவிய 10 ஏவுகணைகளில் ஒன்றைக் கூட இஸ்ரேலிய சைழடீ டிழஒ ளலளவநஅ இனால் சுட்டு வீழ்த்த முடியாமல் போனமையானது, அவை பல இடங்களிலும் வெடித்து பாரிய பாதிப்பை ஏற்படுத்த வழிவகுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இன்று மதியம் தெல்லவிவ் நகரில் இடம் பெற்ற கத்தித் தாக்குதலில் இரண்டு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு 3 பேர் படுகாயமடைந்துள்ளனர். இத்தாக்குதலுக்கு ஹமாஸ் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ள நிலையில் இஸ்ரேலிய படையினர் பல இடங்களில் மக்கள் வாழும் கூடாரங்களின் மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். ஒரு நாளைக்கு ஆக குறைந்தது 100 பேர் வீதம் இத்தாக்குதல்களில் உயிரிழப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இக்கட்டான நிலைமையில் உலக நாடுகள் அவசரமாக தங்களுக்குள் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது மிக முக்கியமானது என பல அரசியல் அவதானிகளும் குறிப்பிட்டுள்ள நிலையில் துருக்கிய அதிபர் என்தோகன், பாப்பரசருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளங்கப்படுத்தி இருப்பதோடு, நிலைமையின் பாரதூரம் தொடர்பில் இரு தலைவர்களும் மிகவும் சிக்கலான பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

மறுபுறம் ரஷ்யா மிகவும் வித்தியாசமான ஒரு காணொளியை வெளியிட்டு இருக்கிறது. அதாவது முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இணைந்து எவ்வாறு இவர்களை எதிர்கொள்வது போன்ற சமய முழக்கங்களுடன் ஒரு காணொளியை வெளியிட்டு இருப்பதானது இந்தப் போர் எதிர்காலத்தில் என்ன வகையான வடிவத்தை எடுக்கும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. எது எப்படி போனாலும் இவ்வாறான போர் நிலைமைகள் இலங்கை போன்ற நாடுகளுக்கு குறிப்பாக எரிபொருள் விநியோகத்துக்கு ஏற்படக்கூடிய தடை மற்றும் தட்டுப்பாடு போன்ற பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் எதிர்வு கூறத்தக்கது.








# இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்தார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்த அவர் உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குச் சென்று ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டியது அவசியமென்பதை தான் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இன, மத பேதமின்றி நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துடன் இலங்கையர் என்ற வகையில் அனைவரும் ஒன்றுபட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று (03) யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் பணிமனைக்கு சென்றிருந்தோடு, அதன் ஊழியர்களையும், ஏனைய ஊடகவியலாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது உதயன் பத்திரிகை பணிமனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தலைமை ஆசிரியர் த. பிரபாகரன் ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றனர்.

அதனையடுத்து ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, அவர்களின் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கினார்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க வேண்டும் என்பதே முதல் பிரச்சினையாக இருந்ததாகவும், கடந்த ஜூன் மாதத்தில் அந்த பிரச்சினையை நிறைவுக்கு கொண்டு வர முடிந்திருந்தமையினால் தற்போது ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவது குறித்து சிந்தித்து வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்களின் போது இளைஞர்கள் பெரும்பாலும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பிலான கோரிக்கைகளையே முன்வைத்தனர். அதனால் வடக்கிலும், தெற்கிலும் உள்ள இளையோரின் எதிர்பார்ப்புக்களில் வேறுபாடுகள் தெரியவில்லை என்றும் கூறினார்.

மாகாண சபைகளை வலுவூட்டி அந்தந்த மாகாணங்களின் அபிவிருத்திக்கான பரந்தளவான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதே தனது எதிர்பார்ப்பாகும் என தெரிவித்த ஜனாதிபதி, அனைத்து மாகாணங்களுக்கும் மத்திய அரசாங்கம் உதவிகளை வழங்குமெனவும் உறுதியளித்தார்.

# முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர்களில் ஒருவரான இவர் எதிர்வரும் 6ம் திகதி தனது பதவியை ஏற்கவுள்ளார். கடந்த வாரம் இவருடைய நியமனத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 34வது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளிவாயலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந் நிகழ்வுகளின் போது ஷஹீதாக்கப்பட்ட சுஹதாக்களுக்காக மற்றும் பலஸ்தீன மக்களின் விடிவுக்காகவும் , நாட்டு மக்களின் நலனுக்காகவும் விஷெட து ஆப் பிரார்த்தனை இடம்பெற்றதுடன் ஹூ தாக்களின் குடும்பத்தினர் மற்றும் உலமாக்கள்,ஊர் பிரமுகரகள், பொதுமக்கள் என அதிகமானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுல்பிகாரின் ஜனாஸா ஞயிறன்று நல்லடக்கம்



பாராளுமன்ற கட்டடத்துக்கு சனியன்று (3) முன்னால் இடம் பெற்ற மோட்டார் கார் விபத்தில் உயிரிழந்த 17 வயது மாணவரான பஸ்ஜாத் சுல்பிகாரின் ஜனாஸா ஞாயிறு அன்று மாலை தெஹிவளை பெரிய பள்ளிவாயலில் பெருந்தொகையானோரின் பிரசன்னத்துடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. மக்கோன பிரதேசத்தை பிறப்பிடமாக கொண்ட, தற்போது அத்திரிய வில் வசித்து வரும் அல்ஹாஜ் சுல்பிகாரின் புதல்வர் இவராவார். இவர் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தி பெற்று பட்ட படிப்பினை மேற்கொள்வதற்காக தனியார் கல்லூரி ஒன்றில் இணைந்திருந்தார். கல்லூரிக்கு சென்று வரும் வழியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் விபத்துக்குள்ளானமையை அடுத்து இந்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது. இவரோடு இன்னும் இருவர் கடுமையான காயங்களோடு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாகனத்தை ஓட்டிச் சென்ற சக மாணவர் பெருமளவு காயங்கள் இன்றி உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.






www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 AUGUST 05 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## பலஸ்தீன் சுதந்திரத்துக்காக பெருவிலை கொடுத்த இஸ்மாயீல் ஹனிய்யா..!

கட்டார் ஐக்கிய அமெரிக்கா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் பங்களிப்புடன் நடத்தப்பட்டு வரும் சமாதான பேச்சுவார்த்தையின் முக்கிய தரப்பாக இருந்த இஸ்மாயீல் ஹனிய்யாவின் மரணம் காஸாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் பணியை தாமதப்படுத்துவதை தவிர்க்க முடியாது.

ஹனிய்யாவின் மரணம் மத்திய கிழக்கில் அடுத்து எதை தோற்றுவிக்கும் என்பதை எதிர்வு கூற முடியாதுள்ளது. இதனால் பாரிய விளைவுகள் ஏற்படலாம். ஹனிய்யாவின் படுகொலையானது பலஸ்தீனில் இடம் பெறும் மோதலை ஒரு புதிய திசைக்கு எடுத்து செல்லும் என ஹமாஸின் ஆயுத பிரிவு தெரிவித்துள்ளது. இக் கொலைக்குப் பிறகு ஈரானின் ஆன்மீகத் தலைவர் கொமைனி இஸ்ரேலுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என பிரகடனப்படுத்தியுள்ளார். என்றாலும் கூட ஈரானின் இராணுவ யுக்தியில் எங்கேயோ பலவீனம் இருப்பதை இக் கொலை எடுத்துக்காட்டிகிறது. இது குறித்து ஈரான் தீவிரமாக சிந்திக்க வேண்டும்.

பலஸ்தீனில் சுதந்திரத்துக்காக போராடிய ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தலைவரான ஹனிய்யா 1980 முதல் ஹமாஸின் ஒரு முக்கிய போராளியாக செயற்பட்டு வந்தார். மேலும் 1989 இல் இடம் பெற்ற பலஸ்தீன கிளர்ச்சியை அடக்கியதனால் இஸ்ரேலினால் அவர் சிறைப்படுத்தப்பட்டார். அதன்பின் 1992 இல் ஹனிய்யா உட்பட ஹமாஸ் தலைவர்கள் பலரும் இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் எவரும் வாழாத நாடு ஒன்றுக்கு நாடு கடத்தப்பட்டனர். பலஸ்தீனில் நடைபெற்ற தேர்தலில் ஹமாஸ் அதிக அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற பின் ஹனிய்யா பிரதமராக்கப்பட்டார்.

2017 இல் ஹமாஸ் அரசியல் பிரிவின் தலைவரான இவர், 2018ல் ஐக்கிய அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தினால் பயங்கரவாதி என முத்திரை குத்தப்பட்டார். கடந்த பல வருடங்களாக இவர் கட்டாரில் வாழ்ந்து வந்தார். சில மாதங்களுக்கு முன் இவரது பிள்ளைகள் படுகொலை செய்யப்பட்டார்கள். பலஸ்தீன சுதந்திரத்திற்காக பெருவிலை கொடுத்த இஸ்மாயில் ஹனிய்யாவை படுகொலை செய்ததின் மூலம் பாலஸ்தீன மக்களின் சுதந்திர போராட்டத்தை மழுங்கடிக்க முடியும் என யாராவது நினைத்தால் அது ஒரு பகற்கனவாகவே இருக்கும். ஏனெனில்இதற்கு முன்னரும் பல ஹமாஸ் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள் எனினும் அப்படுகொலைகளினால் எதனையும் சாதிக்க முடிந்ததில்லை. தொடர்ந்து பலஸ்தீன் தரப்பில் தமது மண்ணை மீட்டெடுப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்தே வருகின்றனர். மனித உரிமை அடிப்படையில் இது ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறலாகவே நோக்கப்படுகிறது. இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனமான இத் தாக்குதலை உலக நாடுகள் அனைத்தும் கண்டித்து பலஸ்தீன் மக்களின் சுதந்திரத்திற்காக தம்மாலான பங்களிப்புகளை செய்வதற்கு முன் வரவேண்டும்.

## கோரிக்கைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவையாவன.

நாங்கள இன்று இந்த உயர்பீடக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர் வருகைதராத நிலையில் (அவரும் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குவதாக அறிவித்திருந்த நிலையில்) முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வும் எங்களுடன் உடனிருந்தார். ஏனைய அனைவரும் ஏகமானதாக ஏற்றுக்கொள்வதாக உத்தரவாதம் அளித்திருக்கத்தக்கதாக, அதேவேளை இந்தக் கட்சியினுடைய உயர்பீடம் நீண்ட நேரம் பல விடயங்களை கலந்துரையாடி, மக்கள் எதிர்பார்க்கின்ற சகல விடஙங்களுக்கும் சரியான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதோடு எமது சமூகம் சார்ந்த மற்றும் நாட்டின் நலன் சார்ந்த பல விடயங்களை நாங்கள் கலந்தாலோசித்தோம். அதனடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் ஆதரவளிப்பதற்கு மிகப் பொருத்தமானவர் என்ற அடிப்படையில் சஜீத் பிரேமதாசவை நாங்கள் ஆதரிப்பது என்றாலும் அவர் நாம் முக்கியமாக முன்வைக்கின்ற கோரிக்கைகளுக்கு சம்மதத்தை தெரிவிக்கின்ற பட்சித்தில் அந்த ஆதரவை நாங்கள் ஊர்ஜிதப்படுத்துவதாகத் தீர்மானித்திருக்கின்றோம்.

அதற்கமைவாக அடுத்துவரும் 72 மணித்தியாலயங்களுக்குள் அது சம்பந்தமான பேச்சு வார்த்தை அவருடன் மேற்கொள்ள இருக்கின்றேன். அவற்றிற்கு அவர் இணங்குகின்ற பட்சத்தில் எமது உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவித்து சஜித் பிரேமதாசாவின் வெற்றிக்காக நாங்கள் மும்முரமாக ஈடுபட இருக்கின்றோம்.

அடிப்படை விடங்களில் உடன்படிக்கை காணப்படா விட்டால் மட்டும். அவர் அவ்வாறான விடயங்ளில் தலைவரோடு உடன்படவில்லை என்பதை தலைவர் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தால் மீண்டும் எங்களுடைய உயர்பீடத்தைக் கூட்டி இந்த முடிவை மீளாய்வு செய்ய நேரிடலாம். இப்பொழுது முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது அதை மீளாய்வு செய்வதனால் மீண்டும் உயர்பீடத்தினாலேயே அதனைச் செய்யலாம். அதனை நான் தனித்து மேற்கொள்ள முடியாது. முக்கியமான விடயங்களை எழுத்து மூலம் பெறுவோம். அவரது தேர்தல் முன்னெடுப்பை பாதிக்கும் விதத்தில் எங்கள் கோரிக்கை அமைந்திருக்கப்போவதில்லை.



எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. விஷேடமாக முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பு அவருக்கு அவசியம் என்பதால் எங்களுடன் உடன்படுவார். நாங்கள் இவ்வளவு தூரம் பயனித்திருக்கின்றோம். ஒவ்கவாரு பிரதேசத்திலும் எங்களது நிறைவேற்றப்படுகின்ற தேவைகளை எங்களது கட்சியின் அமைப்பாளர்கள் எனது கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றார்கள். அவற்றை அவரிடம் கூறுவேன். அவர் அவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். முன்னரும் அவரிடம் கதைத்த தேவைப்படுகளைளோ பெரும்பாலும் மீண்டும் அவருக்கு நினைவூட்டவுள்ளேன்.

சஜித் பிரேமதாச இணங்காத பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைப்பீர்களா என ஊடகவியளாலர் ஒருவர் கேட்டபோது, அப்படியல்ல அவ்வாறானால் அநுரகுமார திசாநாயக்கவுடனும் எங்களுக்கு தைக்கலாம் தானே என்றார்.

அமைச்சர்பதவிகளைப் பற்றியெல்லாம் கோருகின்றீர்காளா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, அதுபற்றிப் பேசமாட்டோம். பதவிகள் அல்ல எங்களுக்கு முக்கியம் நான் ஆற்றமிக்க ஒரு தலைவர். பதவிகளில் இல்லாவிட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு விடயங்களை சாதிக்கத் தெரியும்.

கட்சி தாவும் கரணமடிக்கும் தலைமைத்துவம் அல்ல இது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைத்தீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, ஆம் கதைத்தோம். நான் மட்டுமல்ல நண்பர் மனோ கணேசனும் அவருடன் கதைத்தோம். அதாவது ரணிலும் சஜித்தும் ஒன்றாக இணங்கி செயலாற்றுமாறு தான் நாங்கள் கதைத்தோம். அதற்கு ரணிலும் உடன்படவில்லை, சஜித்தும் உடன்படவில்லை. அதனால் கவலையடைந்தோம்.

ஜனாதிபதி ரணிலைப் பொறுத்தவரை தலைவருடன் நேரடியாகக் கதைக்காமல் எங்களது வேறு நபர்களுடன் கதைத்து அவர்களது ஒத்துழைப்பை பெற எத்தனித்து வருகின்றார். அதனால் முஸ்லிம் காங்கிரஸிக்குள் அதிருப்தி ஏற்பட்டிருக்கின்றது என்றார்.

## நீதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஹேஹண ஹெட்டியாரச்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்வேறு நிச்சயமற்ற தன்மைகள் அடிக்கடி எழுந்தபோதும், அரசியலமைப்பின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தலுக்கு அறிவிப்புச் செய்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 21 ஆம் திகதி நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீங்கள் தேர்தலில் போட்டியிட ஏற்கனவே கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எந்தத் தடையும் ஏற்படாமல் பாதுகாப்பதாக அடிக்கடி தெரிவித்துள்ளீர்கள். அது தொடர்பில் நாங்கள் நன்றி கூறுகிறோம்.

இருப்பினும், பொலிஸ்மா அதிபர் தொடர்பில் நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தடை உத்தரவின் பிரகாரம், பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்காமல் இருப்பதன் மூலம், மீண்டும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நிச்சயமற்ற தன்மை எழுந்துள்ளது. நாட்டின் ஜனநாயகம் மற்றும் தேர்தல் தொடர்பில் அடிக்கடி நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துவது அரசாங்கத்தின், பிரஜைகளின் மற்றும் அரச தலைவர் என்ற வகையில் உங்களின் கௌரவத்துக்கு பாரிய பாதிப்பாகும்.

அதேபோல், பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் உங்களது மேலான கவனத்தைச் செலுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்,

மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதி நிதிகளை நியமித்துக் கொள்ள மக்களுக்கு ஆறு வருடங்களுக்கும் அதிக காலம் இடமளிக்கப்படாமல் இருத்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம், திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை, பல்வேறு நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் ஐந்து வருடங்களுக்குப் பின்னர் மக்கள், ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்துகொள்வதற்கு இருக்கும் சந்தர்ப்பம் தொடர்பில், தற்போது நிச்சயமற்ற தன்மை எழுந்துள்ளமை.

அரசியலமைப்புப் பேரவையில், சபாநாயகரின் அல்லது வேறு தரப்பினரின் குறைபாடு அல்லது அரசியலமைப்புப் பேரவையின் குறைபாட்டினால் இந்த நாட்டு மக்களின் வாக்குரிமையை இல்லாமலாக்கச் செய்வதற்கு யாருக்கும் இடமளிக்காமல் இருப்பது உங்களது பொறுப்பாகும்.

இந்த நாட்டு மக்கள், மக்கள் பிரதிநிதிகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நியமித்துக்கொள்வது அந்தப் பிரதிநிதிகள் மக்களின் வரிப் பணத்தைப் பயன்படுத்துவதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் இடமளிப்பது அந்த நம்பிக்கையின் அடிப்படையிலாகும். பொலிஸ்மா அதிபர் ஒருவர் இல்லாமல் இருப்பதன் அடிப்படையில், தேர்தலுக்கு அழுத்தம் ஏற்பட்டால் அதன் பொறுப்பில் இருந்து விடுபடுவதற்கு, நிறைவேற்று ஜனாதிபதி மற்றும் நியமன அதிகாரி என்ற வகையில் உங்களுக்கு முடியாமல் போகும்.

அதேபோன்று, தற்போதைய ஜனாதிபதி என்ற வகையில் அரசியலமைப்பின் 33 (இ) உறுப்புரைக்கமைய, உங்களுக்குச் சாட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்களில் இருந்து ஒதுங்கியிருக்க முடியாது.

அதனால், ஐந்து வருடங்களுக்குப் பின்னர் மக்களுக்கு, தங்களின் ஆட்சியாளரை நியமித்துக்கொள்ள இருக்கும் தடைகளை நீக்கி, தேர்தல் ஆணைக்குழுவுக்கு நியாயமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.



# உயர் நீதிமன்ற தீர்ப்பை மதித்து வீசா மோசடியை இரத்து செய்யவும்

## ஐ.ம.சக்தி ஜனாதிபதியிடம் வலியுறுத்து



இணைய வீசா தொடர்பில் தற்போதுள்ள நடைமுறையை மாற்றி வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து சேவையைப் பெற அமைச்சரவை உப குழு மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினை மதித்து வீசா மோசடியை உடனடியாக இரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று (3) வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணைய விசா சேவை தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள முறைமையை மாற்றி, வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து சேவையைப் பெற அமைச்சரவை குழு மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவின் மூலம் நாட்டில் ஏற்பட போன பாரிய நிதி மோசடி மற்றும் குற்றச்செயல்களை தடுக்க முடிந்துள்ளது.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### கடன் கொடுத்தால் எழுதிக் கொள்வது கடமை

விசுவாசிகளே! நீங்கள் ஒரு குறித்த தவணையின் மீது (உங்களுக்குள்) கடன் கொடுத்துக்கொண்டால் அதை எழுதிக் கொள்ளுங்கள். தவிர (கடன் கொடுத்தவரோ அல்லது வாங்கியவரோ) உங்களில் (எவர் எழுதிய போதிலும் அதை) எழுதுபவர் நீதமாகவே எழுதவும். (அவ்விருவரும் எழுத முடியாமல் எழுத்தாளரிடம் கோரினால்) எழுத்தாளர் (நீதமாக எழுதுமாறு) அல்லாஹ் அவருக்கு அறிவித்திருப்பதன் படி எழுதிக் கொடுக்க மறுக்க வேண்டாம். அவர் எழுதிக் கொடுக்கவும். தவிர கடன் வாங்கியவரோ (கடன் பத்திரத்தின்) வாசகத்தை கூறவும். (வாசகம் கூறுவதிலும், அதை எழுதுவதிலும்) தன் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளவும். ஆகவே அதில் யாதொன்றையும் குறைத்து விட வேண்டாம். (வாசகம் கூற வேண்டிய) கடன் வாங்கியவர் அறிவற்றவராக அல்லது (வாசகம் கூற) இயலாத (வயோதிபராக அல்லது சிறு)வனாக அல்லது தானே வாசகம் சொல்ல சக்தி அற்ற (ஊமை போன்ற)வராகவோ இருந்தால் அவருடைய பொறுப்பாளர் நீதமாக வாசகம் கூறவும். மேலும் நீங்கள் சாட்சியா(க அங்கீகரி)க்கக் கூடிய உங்கள் ஆண்களில் (நேர்மையான) இருவரை (அக்கடனுக்கு) சாட்சி ஆக்குங்கள். அவ்வாறு (சாட்சியாக்க வேண்டிய) இருவரும் ஆண்பாலராக கிடைக்காவிட்டால் ஒரு ஆணுடன் நீங்கள் சாட்சியாக அங்கீகரிக்கக்கூடிய இரு பெண்களை (சாட்சியாக்க வேண்டும். ஏனென்றால் பெண்கள் பெரும்பாலும் கொடுக்கல் வாங்கலை அறியாதவராக இருப்பதால்) அவ்விரு பெண்களில் ஒருத்தி மறந்து விட்டாலும் மற்ற பெண் அவளுக்கு (அதனை) ஞாபகப்படுத்துவதற்காக (இவ்வாறு செய்யவும்). சாட்சிகள் (அவர்களுக்கு தெரிந்தவற்றை கூற) அழைக்கப்படும் போது (சாட்சி கூற) மறுக்க வேண்டாம். அன்றி கடன் சிறிதாயினும், பெரிதாயினும் (உடனுக்குடன் எழுதிக் கொள்ளவும். அதன்) தவணை (வரும்) வரையில் அதை எழுதாமல் சோம்பல் பட்டு இருந்து விடாதீர்கள். கடனை ஒழுங்காக எழுதிக் கொள்ளவும். இது அல்லாஹ்விடத்தில் வெகு நீதியானதாகவும், சாட்சியத்துக்கு வெகு உறுதியானதாகவும் (கடனின் தொகையையோ அல்லது தவணையையோ பற்றி) நீங்கள் சந்தேகப்படாமல் இருக்க மிக்க (பக்க)பலமாகவும் இருக்கும். ஆனால் நீங்கள் உங்களுக்கிடையில் ரொக்கமாக நடத்திக் கொள்ளும் வர்த்தகமாக இருந்தால், அதனை நீங்கள் எழுதிக் கொள்ளாவிட்டாலும் அதனால் உங்கள் மீது குற்றமில்லை. ஆயினும், (ரொக்கமாக) வர்த்தகம் செய்து கொண்ட போதிலும் அதற்கும் சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்..! அன்றி (தவறாக எழுதுமாறு) எழுத்தாளனையோ, (பொய் கூறும் படி) சாட்சியையோ துன்புறுத்தக் கூடாது. (அவ்வாறு) நீங்கள் துன்புறுத்தினால், நிச்சயமாக அது உங்களுக்கு பெரும் பாவமாகும். ஆகையால் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். அல்லாஹ் (கொடுக்கல் வாங்கல்களை பற்றிய தன்னுடைய விதிகளை) உங்களுக்கு இவ்வாறெல்லாம் கற்றுக் கொடுக்கிறான். மேலும் அல்லாஹ் அனைத்தையும் மிக அறிந்தவன் (2:282)

**அல்லாஹ்வின் ஆற்றல்**

வானங்களிலும் பூமியிலும் உள்ளவை (அனைத்தும்) அல்லாஹ்வுக்குரியனவே..! உங்கள் மனதில் உள்ளவற்றை நீங்கள் வெளியிட்டாலும், அல்லது மறைத்துக் கொண்டாலும் அவற்றைப் பற்றியும் அல்லாஹ் உங்களை கேள்வி கேட்பான். அவன் விரும்பியவர்களை மன்னிப்பான். விரும்பியவர்களை வேதனை செய்வான். அன்றி, அல்லாஹ் அனைத்தின் மீதும் மிக்க ஆற்றல் உடையவன். (2:284)

## ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு தேர்தல்கள் ஆணைக்குழு ஐரோப்பிய ஒன்றியம் இடையில் உடன்படிக்கை கைச்சாத்து

(ஐ. ஏ. காதிர் கான் )

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது, சுயாதீன தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுப்பது குறித்து, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் நிர்வாக மட்ட உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கும் நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகளும் நாடளாவிய ரீதியில் மக்கள் கூட்டங்களை நடாத்தி வருகின்றன.

இருப்பினும், எதிர்வரும் 15 ஆம் திகதி வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரான காலப்பகுதியில் இடம்பெறும் தேர்தல் விதி மீறல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவும், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் அவதானம் செலுத்தி வருகின்றன.

அதேவேளை, தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில், வழமைபோன்று இம்முறையும் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுக்குமாறு, ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுத்திருந்தது.

அவ்வழைப்பை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில், இது குறித்து தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கவுக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான நிர்வாக மட்ட உடன்படிக்கை (31) புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்கும் பணியில் தமது தேர்தல் கண்காணிப்புக் குழுவை ஈடுபடுத்தும் செயன்முறையின் முதற்கட்டம் இதுவென, ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று இந்த ஆரம்பகட்ட உடன்படிக்கையின் அடுத்தகட்டமாக, தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ள ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவின் விபரங்கள் வெளியிடப்படும் என, தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.



# ஹமாஸ் தலைவர் படுகொலை... பதட்டத்தில் சர்வதேசம்...

## பழிவாங்குவது எங்கள் கடமை என்று ஈரான் அறிவிப்பு!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்ரேலிய ராணுவம் அத்துமீறிய வங்குரோத்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதைக் சர்வதேச சமூகம் மிகுந்த எரிச்சல் அடைந்த நிலையில் பாத்து கொண்டு இருப்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இஸ்ரேலிய அதிபர் பெஞ்சமின் நிதான்யாகு ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட இன படுகொலை நபர் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

காசாவில் பொதுமக்களின் துயரத்தின் விளைவாக பல்வேறு சிக்கலுக்கு காரணமாக இருந்து வரும் அவர் தற்போது மிகப் பெரிய அளவில் தன்னை சுற்றி பகையாளிகளை உருவாக்கி கொண்ட நிலையில் இனி இஸ்ரேலிய தேசம் எந்த காலத்திலும் முன்னுக்கு வர முடியாத நிலையை அந்த நாட்டின் அரசு உருவாக்கி கொண்டது என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

ஈரான், ஏமன் ஹீத்திக்கள், ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் மற்றும் சிரியாவில் இருந்து செயல்படும் பல்வேறு ஜிஹாதி போராளி குழுக்கள் என்று பலரின் கோபத்தை முழுமையாக சம்பாதித்து வந்துள்ள நிலையில் வருங்காலத்தில் இஸ்ரேலிய நாட்டில் இருந்து பெரும்பாலான யூதர்கள் மீண்டும் ஐரோப்பா மற்றும் பல்வேறு தேசங்களுக்கு இடம் பெயர்ந்து செல்வது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி விடும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

தற்போதைய நிலையில் ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவராக செயல்பட்டு வந்த இஸ்மாயில் ஹனியாவை ஈரான் அதிபர் மசூத் ஹெக்ஷி பதவி ஏற்பு விழா கலந்து கொண்டு விட்டு வீட்டில் தங்கி இருந்த நிலையில் இஸ்ரேலிய ராணுவம் குண்டு வீசி படுகொலை செய்து விட்ட நடவடிக்கைகள் தற்போது மத்திய கிழக்கு நாடுகள் முழுமையாக பற்றி எரிகிறது என்கிற அளவுக்கு மிக மோசமான நிலையை உருவாக்கி விட்டது என்பதே உண்மையாகும்.

கடந்த பல ஆண்டுகளாக அவர் மீது பல முறை கொலை முயற்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதில் தப்பி பிழைத்த இஸ்மாயில், தற்போது ஈரான் தலைநகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டிருக்கிறார். அவருடன் அவருடைய மெய்காப்பாளர் ஒருவரும் கொல்லப்பட்டிருக்கிறார் என ஹமாஸ் தெரிவித்திருக்கிறது.

இவர் மீது கடந்த 2004ம் ஆண்டு இஸ்ரேல் பாதுகாப்பு படை தாக்குதல் நடத்தியது. வீட்டில் இருக்கும் நேரமாக பார்த்து இவரது வீட்டின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால் இந்த தாக்குதலில் அவர் உயிர் பிழைத்துவிட்டார். அதேபோல 2019ம் ஆண்டு காசாவில் இவரது அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலின்போது அவர் அலுவலகத்தில் இல்லை. எனவே உயிர் பிழைத்துக்கொண்டார். இருப்பினும் இன்று நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் உயிரிழந்திருக்கிறார்.

ஈரானில் புதிய அதிபர் பதவியேற்க இருக்கிறார். இந்த பதவியேற்பு விழாவுக்கு இஸ்மாயில் வந்திருந்த போது இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் இஸ்மாயில் மற்றும் அவருடைய மெய்பாதுகாவலர் என 2 பேர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இதனை ஹமாஸ் உறுதி செய்திருக்கிறது.

இந்த கொலை தொடர்பாக ஹமாஸ் விடுத்துள்ள அறிக்கையில், ”நமது தலைவர் முஜாஹித் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதற்காக பாலஸ்தீனிய மக்களுக்கும், அரபு மற்றும் இஸ்லாமிய தேசத்திற்கும், உலகின் அனைத்து சுதந்திர மக்களுக்கும் இரங்கல் தெரிவித்துக்கொள்கிறோம். புதிய ஈரானிய அதிபரின் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற பின்னர், தெஹ்ரானில் உள்ள அவரது இல்லத்தில் இஸ்ரேலின் துரோகிகளால் நமது தலைவர் கொல்லப்பட்டிருக்கிறார்” என தெரிவித்திருக்கிறது.

அதேநேரம் இந்த தாக்குதலுக்கு நிச்சயம் பதிலடி கொடுக்கப்படும் என்றும் ஹமாஸ் எச்சரித்துள்ளது. இந்த தாக்குதல் பாலஸ்தீன மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தும் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் எச்சரித்துள்ளனர். இஸ்மாயில் ஹனியா படுகொலை நடந்த நிலையில் ஈரான் உயர் தலைவர் அயத்துல்லா அலி காமேனி (யுலயவழடடயா யுடை முாயஅநநெi) அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், “இஸ்மாயில் ஹனியே எங்கள் அன்பிற்குரிய விருந்தாளியாக இருந்தார். தெஹ்ரானில் அவர் படுகொலை செய்யப்பட்ட நிலையில், இஸ்ரேல் தனக்கென ஒரு கடுமையான தண்டனையை தயார் செய்து கொண்டுள்ளது. இஸ்ரேலை பழிவாங்குவது ஈரானின் கடமை என்று நாங்கள் கருதுகிறோம்““ என தெரிவித்துள்ளார்.

இந்த கொலை சம்பவத்திற்கு பிறகு ஈரானின் உயர்மட்ட தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் அந்நாட்டின் உயர்மட்ட தலைவர் அயதுல்லா அலி கமேனி பங்கேற்றிருந்தார். இந்த கூட்டத்தில் இஸ்ரேல் மீது உடனடியாக நேரடி தாக்குதல் நடத்த வேண்டும் என்று அவர் உத்தரவிட்டிருந்தார். இதனை நியூயார்க் டைமஸ் செய்தி ஊடகம் தெரிவித்திருக்கிறது.

இது குறித்து ஈரான் அதிகாரிகள் கூறுகையில், ”ஈரானிய இராணுவத் தளபதிகள் டெல் அவிவ் மற்றும் ஹைஃபாவிற்கு அருகிலுள்ள இராணுவ இலக்குகள் மீது ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளின் மற்றொரு கூட்டுத் தாக்குதலைப் பரிசீலித்து வருகின்றனர். ஆனால் பொதுமக்கள் மீதான தாக்குதல்களைத் தவிர்ப்பதில் உறுதியாக இருக்கின்றனர்” என்று கூறியுள்ளார்.

ஹனியேயை கொலை செய்தது யார் என்பது குறித்து அதிகாரப்பூர்வமாக தகவல் வெளியாகாத நிலையில், இஸ்ரேல் தான் இந்த படுகொலையை செய்ததாக ஈரான், துருக்கி, கத்தார் போன்ற நாடுகளும் இஸ்ரேலை குற்றம்சாட்டி வருகின்றன.

ஹமாஸில் ஆயுதம் ஏந்திய பலர் இருந்தாலும், இஸ்மாயில் மிதவாதியாக அறியப்படுகிறார். இவருடைய குழந்தை பருவம் அகதிகள் வாழ்க்கையிலிருந்துதான் தொடங்கியது. ஹமாஸின் மற்ற தலைவர்களுடன் ஒப்பிடாமல், இவரை காசா மக்கள் தனி மரியாதையுடன் பார்த்து வந்தனர். குறிப்பாக போரை நிறுத்த இவர் மேற்கொண்டிருந்த பேச்சுவார்தையில் காசா மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தனர்.

இஸ்மாயில் ஹனியே கடந்த 2017 முதல் ஹமாஸின் தலைவராக இருந்து வருகிறார். தற்போது ஹமாஸின் அரசியல் பணியகத்தின் தலைவராக பணியாற்றி வந்திருக்கிறார்.

ஹஸேம், அமீர் மற்றும் முகமது எனும் இவருடைய மூன்று மகன்கள், கடந்த ஏப்ரல் 10 அன்று இஸ்ரேலிய விமானப்படை தாக்குதலில் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் நான்கு பேரக்குழந்தைகள், மூன்று பெண்கள் மற்றும் ஒரு ஆண் குழந்தையும் உயிரிழந்தனர்.

இப்படி இருக்கையில் இவருடைய படுகொலை மக்களிடையே எதிர்மறையான எண்ணத்தை ஏற்படுத்தும் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். சர்வதேச அழுத்தம் காரணமாக போர் நிறுத்தத்திற்கு ஹமாஸ் தயாராகி வந்த நிலையில், இந்த படுகொலை போரை மேலும் கோரமாக்கும் என்று எச்சரித்துள்ளனர்.

அதேநேரத்தில் இஸ்மாயில் ஹனியாவை இஸ்ரேலிய ராணுவம் படுகொலை செய்தது குறித்து கொஞ்சமேனும் அடக்கி வாசித்ததை போல் தெரியவில்லை. இந்த படுகொலை குறித்து அவர்கள் நேரிடையாக ஒப்புக் கொள்ளாத நிலையில் தங்களை எதிர்க்கும் அனைவருக்கும் இது தான் பாடம் என்று ஆணவம் பொங்க கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.இந்த படுகொலை ஈரான் மண்ணில் அவர்களது விருந்தாளியாக வந்த ஒருவர் படுகொலை செய்யப்பட்டது என்பது மிகுந்த அதிர்ச்சியை ஈரான் அரசின் தலைமைக்கு ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த படுகொலை நடந்த பிறகு ஈரான் நிச்சயமாக மிகப் பெரிய அளவில் ஆன தாக்குதலை நடத்தி விட முன்னேற்பாடுகள் நடந்து வருவது அந்த பிராந்தியத்தில் மிகுந்த பதட்டத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. ஈரான் அரச ஆயுத படை தலைவர் கொமேனி இஸ்ரேல் நாட்டை நேரடியாக தாக்க வேண்டும் என்று கூறி உள்ளது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறி உள்ளது. இதற்கு மேல் ஈரான் நாட்டில் சக்தி வாய்ந்த தலைவரின் கருத்து இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த போர் அல்லது தாக்குதலை நடத்த இஸ்ரேலிய தனது வலிமை வாய்ந்த மொசாட் அமைப்பின் மூலம் தான் நிகழ்த்தியிருக்க வேண்டும். அதே நேரத்தில் ஈரான் மண்ணில் இருந்து இதற்கு முழுமையாக தகவல்களை யாராவது ஒருவர் வழங்கி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அதாவது ஈரான் அரசின் வளையத்தில் இருந்து தான் இதற்கு உதவிகளை யாராவது செய்து இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. ஏனெனில், இஸ்மாயில் ஹனியா தங்கியிருந்த மாளிகை மற்றும் அதன் அறைகளை துல்லியமான முறையில் அறிந்து இருந்தால் மட்டுமே இது போன்ற தாக்குதலை நடத்தி இருக்க வாய்ப்பு உள்ளது என்று சர்வதேச போர் உத்திகளை அறிந்து கொள்ளும் முகாமையாளர்களின் தெளிவான கருத்தாக இருக்கிறது.

முன்னதாக நேற்றைய தினம் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில், ஹமாஸ் அதரவு அமைப்பான ஹிஸ்புல்லா தலைவர் கமாண்டர் ஃபுவாட் /க்ர் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியா மற்றும் ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மசூத் சூக் படுகொலைகளை தொடர்ந்து தற்போது நிலையில் களம் மிகவும் மாறுபட்ட ஒரு நிலையை அடைந்துள்ளது.

அதாவது, மீண்டும் போர் உக்கிரமான ஒரு நிலையை அடைந்துள்ளது என்பதே உண்மையாகும்.இது வரையில் இஸ்ரேலிய ராணுவம் அப்பாவி பொதுமக்கள், குழந்தைகளை படுகொலை செய்து வந்த நிலையில் இனி அவர்களின் மோதல் சர்வதேச அளவில் மிகப் பெரிய அளவில் வலுவான சக்தி வாய்ந்த ஹிஸ்புல்லாஹ்க்களிடம் மோதுவது மிகப்பெரிய பலப்பரீட்சையாக இஸ்ரேலுக்கு எதிராக அமையும் என்பதில் ஐயமில்லை.இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள கோலன் குன்றுகள் (Golan Heights) பகுதியில் நடந்த ராக்கெட் தாக்குதலில் 12 குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலை அடுத்து அமெரிக்கா சென்று இருந்த பெஞ்சமின் நிதான்யாகு உடனடியாக இஸ்ரேல் நாட்டிற்கு திரும்பி வந்து விட்டார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில்

ஹிஸ்புல்லாஹ் மீது இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ள நிலையில், இரு தரப்புக்கும் இடையே போர் ஏற்படும் அச்சம் அதிகரித்துள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களாக இஸ்ரேலின் வடக்கு எல்லையிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும், இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையே நடந்து வரும் தாக்குதல்களில் சமீபத்தில் நடந்திருக்கும் சம்பவம் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

ஹிஸ்புல்லாஹ் என்பது ஒரு ஷியா முஸ்லிம் அமைப்பு. அதாவது ஷியா முஸ்லிம்கள் சித்தாந்தம் சார்ந்த ஈரான் அரசின் பூரணமான ஆதரவைப் பெற்று உலகளவில் பலம் வாய்ந்த ராணுவத்தில் ஒன்றாக ஹிஸ்புல்லாஹ் அமைப்பு மாறி விட்டது. அதாவது அரசியல் ரீதியாக செல்வாக்கு மிக்க அமைப்பாகவும் உருவெடுத்துள்ளது. இது லெபனானில் மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதப்படையின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது.

1980களின் முற்பகுதியில் இஸ்ரேலை எதிர்ப்பதற்காக பிராந்தியத்தின் மிகவும் மேலாதிக்க ஷியா சக்தியான ஈரான் அரசால் நிறுவப்பட்ட அமைப்பு தான் ஹஹிஸ்புல்லாஹ் . ஆகவே தான் ஹிஸ்புல்லாஹ்களின் பலத்தை அறிந்த நிலையில் தான் இஸ்ரேலிய ராணுவம் போருக்கு செல்லாமல் பின்தங்கிய நிலையில் நீண்டதொரு ஆலோசனையில் ஈடுபட்டு வருவதைக் சர்வதேச நாடுகள் மிகவும் கவனமாக அவதானித்து வருகின்றது. ஹிஸ்புல்லாஹ் அமைப்பு ஒரு போராளிக் குழுக்களாக செயல்பாடுகளை அமைத்து வந்த நிலையில் 1992 ஆம் ஆண்டு முதல் தேசிய தேர்தல்களில் பங்கேற்று ஒரு முக்கிய அரசியல் சக்தியாக மாறியது. அதாவது சர்வதேச நாடுகள் மத்தியில் அவர்களைப் பற்றிய பார்வை முற்றிலும் மாறினாலும் அதன் அடிப்படையிலான இராணுவ மயமாக்கல் தொடர்ந்து நடைபெற்று வந்ததை அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. ஹிஸ்புல்லாஹ்களின் ஆயுதப் பிரிவு லெபனானில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கப் படைகள் மீது கொடிய தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக இஸ்ரேலிய ராணுவம் லெபனானில் இருந்து வெளியேறியது. இந்த நிலையில் தான் ஹிஸ்புல்லாஹ் ராணுவம் ஆயிரக்கணக்கான வீரர்களுடன் ஒரு பெரிய ஏவுகணை உள்பட ஆயுதக் கிடங்கை பராமரித்து வருகிறது.

ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைமை பொறுப்பில் இருக்கும் ஹஸசன் நஸ்ருல்லாஹ் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு ராணுவ தலைவர் ஆவார். கடந்த 32 ஆண்டுகளாக பொறுப்பில் இருக்கும் ஹஸசன் நஸ்ருல்லாஹ் ஒரு திறன் வாய்ந்த அமைப்பாக ஹிஸ்புல்லாஹ் மாற்றம் அடையும் வகையில் கடுமையான அளவில் பாடுபட்டார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

மிகவும் சக்தி வாய்ந்த ஹிஸ்புல்லாஹ்க்களிடம் 120,000-200,000 ராக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகளைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை சர்வதேச ஆய்வு அமைப்பான (ஊநவெநச கழச ளுவசயவநபஉை யனெ ஐவெநசயெவழையெட ளுவரனநைள) தெரிவித்துள்ளது. ஹிஸ்புல்லாஹ் அமைப்பிடம் பெரும்பகுதி தரையில் இருந்து மற்றொரு தரை இலக்கை தாக்கும் சிறிய ரக ராக்கெட்டுகள் ஆகும். விமான எதிர்ப்பு, கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் இஸ்ரேலின் உள் பகுதி வரையிலும் சென்று தாக்கும் திறன் கொண்ட வழிகாட்டப்பட்ட ஏவுகணைகளைக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.காஸா பகுதியில் ஹமாஸ் வசம் இருப்பதை விட இங்கு மிகவும் நுட்பமான ஆயுதங்கள் இருப்பதாக கருதப்படுகிறது. அதாவது உலகிலேயே சக்தி வாய்ந்த ஆயுத திறன் கொண்ட இஸ்ரேலிய அரச தலைமை ஒன்றுக்கு பல முறை லெபனான் மீது படையெடுக்க யோசனை செய்வதை நாம் அறியும் போது அவர்களின் மதிப்பை அதாவது இராணுவ சக்தியை நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

2023 அக்டோபர் 8 அன்று, ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் உள்நாட்டில் நுழைந்து தாக்குதல் நடத்த முற்பட்ட காலம் முதலாக பாலத்தீனர்களுக்கு ஆதரவாக இஸ்ரேலிய நிலைகளை நோக்கி ஹிஸ்புல்லாஹ்க்கள் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதை தொடர்ந்து இருதரப்புக்கும் இடைப்பட்ட மோதல்கள் தீவிரமடைந்தது.

இந்த நிலையில் தான் இஸ்ரேலிய வடக்கு மற்றும் கோலன் குன்றுகளில் இஸ்ரேலிய நிலைகள் மீது லெபனானில் இருந்து ராக்கெட்டுகளை ஏவியது, கவச வாகனங்கள் மீது டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை (யவெை-வயமெ அளைளடைநள) வீசியது மற்றும் வெடிக்கும் ஆளில்லா விமானங்கள் மூலம் ராணுவ இலக்குகளைத் தாக்கியது என்று தொடர் நடவடிக்கைகள் மூலம் அந்த பிராந்தியத்தில் ஒரு பதட்டத்தை ஹிஸ்புல்லாஹ் அமைப்பு ஏற்படுத்தியது . இதன் மூலம் வடக்கு பகுதியில் வாழ்ந்த ஏராளமான யூத மக்கள் இடம் பெயர்ந்து செல்லக்கூடிய சூழல் உருவானது. இதனைத் தொடர்ந்து

இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் (ஐனுகு) லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாஹ் நிலைகளுக்கு எதிராக விமானத் தாக்குதல்கள் மற்றும் டாங்கிகள் மற்றும் பீரங்கித் தாக்குதல்களைப் பயன்படுத்தி பதிலடி கொடுத்து வந்த நிலையை நாம் காண கூடியதாக இருக்கிறது.

அதேசமயம் இஸ்ரேலில், 60,000 பொதுமக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டியிருந்தது . இந்த தாக்குதல் காரணமாக பல நூற்றுக்கணக்கான ராணுவ வீரர்கள் கொல்லபட்ட நிலையில் 10 பொதுமக்கள் உட்பட 33 பேர் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய அதிகாரிகள் கூறுகின்றனர் இந்த நிலையில் மோதல்கள் இருந்த போதிலும், இதுவரை இரு தரப்பும் முழு அளவிலான போரில் ஈடுபடவில்லை. எல்லை தாண்டாமல் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லாஹ் ராணுவம் கட்டுப்பாட்டுடன்



தொடர்ச்சி 8 ம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதித் தேர்தல்:

# ஆதரவுக் கணிப்பில் சஜித் முன்னிலையில்

(ஐ. ஏ. காதிர் கா ன்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஆதரவு தொடர்பில், சுகாதாரக் கொள்கை நிறுவகம் நடத்திய ஆய்வில், 43 சதவீத ஆதரவு கிடைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா முன்னிலையில் உள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 30 சத வீதமான ஆதரவு இருப்பதாக, கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளதாகவும் சுகாதாரக் கொள்கை நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்த ஆதரவு, 20 சத வீதமாகக் காணப்படுவதாகவும், சுகாதாரக் கொள்கை நிறுவகம் மேலும் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலவச சூரிய மின்கல மின்சார உற்பத்தி தொடர்பான கலந்துரையாடல்

(எம்.எம்.ஜெஸ்மின்)

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபை ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டு திட்டங்களுக்கு சூரிய மின்கல மின்சார உற்பத்தி மூலம் மின்சார வசதிகளை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக குறித்த வீடுகளில் வாழும் குடும்பங்களின் மின்சார தேவைகளை இலவசமாகவும் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும்



மின்சாரத்தினை இலங்கை மின்சார சபைக்கும் விற்பனை செய்வதற்குமான நடவடிக்கை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த ஒப்பந்த காலத்துக்கு பிறகு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் சூரியமின்கலத் தொகுதிகள் குறித்த பயனாளிகளுக்கு சொந்தமாவதுடன் அதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மேலதிக மின்சாரத்தை இலங்கை மின்சார சபைக்கு நேரடியாகவே விற்பனை செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தை பெற முடியும் எனவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி ரத்நாயக, ஆளுநரின் செயலாளர் எம் மதநாயக, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளர் ராஜிவ்சூர்யாராச்சி, உப தவிசாளர் லக்ஷ்மன் குணவர்தன, பொது முகாமையாளர் கே ஏ ஜானக, திருகோணமலை மாவட்ட முகாமையாளர் பொறியாளர் நிமல் போன்ற அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தன்னியக்க பண இயந்திரம் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்ட இலங்கை வங்கியின் தன்னியக்க பண இயந்திரம் கிண்ணியா பிரதேச செயலாளரின் தலைமையில் பொதுமக்கள் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வின் போது இலங்கை வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் கே.சி.மகவத்த, கிழக்கு மாகாண செயற்பாட்டு முகாமையாளர் எச்.எம்.ஜீ.ஆர். விஜயவர்த்தன ஆகியோருடன் கிண்ணியா பிரதேசத்தில் கடமையாற்றுகின்ற பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் , கணக்காளர்

நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கிண்ணியா நகர சபையின் செயலாளர் ஆகியோர் என பலரும் கலந்து கொண்டனர்.




# சமூக மாற்றத்தை துரிதப்படுத்தும் கல்விச் செயற்பாடுகள்

கல்வி செயற்பாடுகள் கோட்பாடு ரீதியாக மாத்திரமன்றி சமூகத்தில் நடைமுறை சார்ந்த வாழ்வியல் சிக்கல்களுக்கு தீர்வு சொல்லக்கூடிய வகையில் அமைய வேண்டும். பரீட்சை மண்டபத்துக்கும் வினாத்தாள்களுக்கும் விடை அளிப்பதற்கு மாத்திரமாக கல்வியை நாம் அமைத்து விடக்கூடாது ஆனால் பெரும்பாலும் இன்றைய எமது கல்வி திட்டங்களும் முறைமைகளும் பரீட்சை அமைப்புகளும் அப்படித்தான் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன அப்படித்தான் விளம்பரம் செய்யப்பட்டிருக்கின்றன அதனால் தான் கல்விச்சாலைகளில் கூட பண்பாட்டில போய் பரவலாக காண்கிறோம்.

எனவே, கல்வி செயற்பாடுகள் காலத்துக்கு ஏற்ப மாற்றத்தை தரக்கூடிய கனங்காத்திரமான பணிகளை ஆற்றக்கூடியதாக சமூகம் வேண்டி நிற்கின்ற தீர்வுகளுக்கான முன்னெடுப்புகளை செய்யக்கூடிய ஆற்றல் பெற்றதாக கல்விச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

கலைத்திட்டமும் பாடத் திட்டமும் ஒரு புறம் இருக்க சமூகத்தின் நடைமுறை பிரச்சனைகள் மறுபுறம் இருக்க கல்வி செயற்பாடுகளால் எந்தவிதமான பிரயோசனமும் அற்றதாக இருக்குமாக அமையின் அர்த்தமற்றதாகிவிடும் வாழ்க்கைக்கு உதவக்கூடிய வாழ்க்கையிலே நிரந்தர மாற்றத்தை தரக்கூடிய நமது திறன்களை வாழ்க்கைக்கும் வளமாக்கள் பணிகளுக்கும் முதலீடு செய்யக் கூடியதாக கல்வி செயற்பாடுகள் அமைய வேண்டும் அப்பொழுதுதான் சமூகத்திலே மிகச்சிறந்த ஒரு மாற்றத்தை உருவாக்க முடியும்.

ஒரு சமூகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் கல்வியில் தான் தங்கி இருக்கின்றது. அது எந்த சமூகமாக இருந்தாலும் கல்வி மீது எந்த அளவு தூரம் கவனக்குவிப்பு செய்து அதற்கான செயற்பாடுகளில் அவதானம் செலுத்துமோ அந்த அளவுக்கு அந்தச் சமூகத்தில் கல்வி கற்றவர்கள் பெருகி இருப்பர். அவர்களால் சமூகம் பயன் கண்டு கொண்டே இருக்கும்.

இன்றைய உலகில் கல்வியை கற்றவர்களும் பெற்றவர்களும் அதிகமாக இருந்தாலும் கல்வி மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நடத்தை சார்ந்த, மனப்பாங்கு சார்ந்த, பண்பாடு சார்ந்த மாற்றுங்கள் அருகி வருகின்றன. காரணம் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்காகவும் சமூக அந்தஸ்துக்காகவும் செல்வாக்கு, கௌரவம் போன்றவற்றை பெற்றுக் கொள்ளவும், உயர்ந்த ஒரு தொழிலை, கொழுத்த சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்குமான ஊடகமாக கருதப்படுகின்றது. பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கல்வி பொருளாதாரப் பண்டமாக மாறி வருகின்றது. யாரிடத்தில் அதிகமாக பணம் இருக்கின்றதோ அவருக்கு எல்லாவிதமான கல்வித் தகமைகளையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள், வாயில்கள் திறந்து விடப்பட்டிருக்கின்றன. இயல்பாகவே ஆற்றலும் திறமையும் விருப்பமும் ஈடுபாடும் இருந்தும் பொருளாதார வசதியும் பலமும் இல்லையோ அவரால் கல்விப் புலத்தில் அந்த அளவு உச்சத்தை தொடுவது சிரம சாத்தியமான விடயமாக மாறி இருக்கின்றது் எனினும் இவை எல்லாவற்றையும் கடந்து கல்வி மீது எமது கவனம் குவிகின்ற பொழுது எமது சமூகத்தின் பிற்போக்கு நிலையும் முடக்கமும் தேய்க்கவும் நீங்கி சகல துறைகளிலும் அபிவிருத்தியில் உயர்ந்து நிற்கும்.

கல்வியை புறக்கணித்து பொருளாதாரத்தில் மாத்திரம் எமது அவதானத்தை செலுத்தினால் சடவாத சிந்தனை உயர்ந்து நிற்கும். பண்பாட்டிலும் ஆன்மீக வறுமையும் சமூக உணர்வற்ற சுயநல தன்மையும் நிச்சயம் ஆழ வேரூன்றி விடும். இத்தகைய ஒரு பக்க சாய்வான அல்லது ஒரு பக்கம் வீங்கிய கல்வியானது சமூகத்தை கல்வி கற்காத நிலையில் வரக்கூடிய அபாய நிலையை விடவும் மோசமான ஒரு நிலைக்கு இட்டுச்செல்லும். கல்வி கற்காத நிலையால் கல்வி வாடை அற்றவர்களால் ஏற்படக்கூடிய சமூக பாதிப்புகளை விட கல்வியை கற்றும் பெற்றும் உள்ளவர்கள் வாழ்கின்ற சூழலில் பண்பாட்டிழப்பு ஏற்படுகின்ற பொழுது கல்வியை அளவுகோலாக வைத்து சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் மட்டிடப்படுகின்ற பொழுது வரக்கூடிய பாதிப்புகளும் தாக்கங்களும் சமூக பிளவுகளும் விளைவுகளும் ஆபத்தான கூறுகளையே கொண்டு வந்து சேர்க்கும்.

எனவே, கல்வி ஏன்? எதற்கு? என்ற ஆழமான வினாவை கண் முன் வைத்துக் கொண்டுதான் எமது சமூகத்திற்கு கல்வி பற்றிய விழிப்புணர்வை நாங்கள் ஊட்ட வேண்டிய தேவைப்பாடு கொண்டுள்ளோம். கல்வியைக் கற்பதன் நோக்கம் குறித்து ஆன்மீக ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நாங்கள் தெளிவை வழங்க வேண்டும். இல்லாத பட்சத்தில் கல்வி பொருளாதாரப் பண்டமாக மாத்திரம் கருதப்பட்டு பொருளாதார நலன்களும் சுயநலன்களும் அடையப் பெறுவதற்கான ஊடகமாக மாறிவிடும்.

இப்படி மாறுகின்ற பட்சத்தில் சமூகத்தில் துரித மாற்றத்தை நிரந்தர மாற்றத்தை நிலையான மாற்றத்தை காண்பது அரிதாகவே இருக்கும்.

எப்பொழுதும் கல்வி கற்றவர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளும் முரண்பாடுகளும், மோதல்களும் சண்டை சச்சரவுகளும் பிளவுகளும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். எனவே கல்வி கற்பதன் நோக்கத்தை ஆன்மீக ரீதியாக, சமூக ரீதியாக, சமூகத்தின் அடிப்படைத் தேவை என்ற நிலைப்பாட்டில் இருந்து உணர்கின்ற பட்சத்தில் மாத்திரம் தான் கல்வியால் ஒரு சமூகத்தை மாற்றத்தைக் கொண்டு வர முடியும். அதனையும் உயர்ந்த நிலைக்கு கொண்டு வர முடியும். அந்த சமூகத்திலே அபிவிருத்தியை, எழுச்சியைக் கொண்டு வர முடியும்.

எனவே, பின்னடைந்திருக்கின்ற எமது சமூகத்தை அரசியல் ஆன்மீக பொருளாதார சிந்தனை சிக்கல்கள் அனைத்திலிருந்தும் மாற்றிக் கொள்வதற்கு கல்வியை நாங்கள் கூரான ஊடகமாக பயன்படுத்த வேண்டும். கல்வியால் மாத்திரம் தான் ஒரு சமூகத்தில் நிலையான நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதுவே மிகவும் வலிமையான ஆயுதம் என முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்கள் கூறிய கல்விச் சிந்தனை பற்றிய கருத்து எமது சமூகத்திற்கும் மிகவும் பொருத்தமாக அமைகிறது. கல்வியை அதற்கே உரிய ஒழுங்குகளில் தேடிக் கற்றுக் கொள்வதும் பெற்றுக் கொள்வதும் எமது கடமையாக இருக்கின்றது. நாம் கற்ற கல்வியால் சமூகம் பயனடைய வேண்டும். நம் கற்ற கல்வியால் சமூகம் பயனடைவதற்கு முன்னர் எம்மில் ஒரு நிரந்தர மாற்றம் வர வேண்டும். எம்முடைய வாழ்வும் வாழ்வொழுங்கும் நடத்தைகளும் மாற வேண்டும். எம்மை மாற்றாத கல்வி அடுத்தவர்களை நிச்சயம் மாற்றாது. எமக்கு பயன் தராத கல்வி அடுத்தவர்களுக்கு நிச்சயம் பயன் தராது. எமக்கு நலவுகளை கொண்டு வராத கல்வி அடுத்தவர்களுக்கு எந்த நிலவுகளையும் கொண்டு வராது. சமூகம் பற்றிய எமது பார்வையை, மாற்ற உதவாத கல்வி, சமூகம் பற்றிய எமது பார்வையை ஒருபோதும் மாற்றிவிட மாட்டாது.

எனவே, கல்வி மீதான கூர்ந்த அவதானிப்புடன் அதனை தேடிக்கொள்வதற்குரிய வழிகளை நாம் கண்டடைய வேண்டும். கல்வியே அழியாத நிலையான செல்வம் என்பதனை உணர்வதும் உணர்த்துவதும் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. கல்வி கற்பதன் நோக்கம் மனித நடத்தைகளை மனப்பாங்குகளை மாற்றுவதற்கு தான் என்ற உள்ளுணர்வோடு நாம் அதனை தேடுகின்ற பொழுது நிச்சயம் அது மாற்றத்தை கொண்டு வரும். அப்படி இல்லாமல் எமது சுயநலன்களுக்காக மாத்திரம் அல்லது ஏதோ ஓர் இடத்தை அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மாத்திரம் தேடிக் கேட்கப்படும் கேள்வியால் எந்த பிரயோசனமும் இருக்காது. அவர்களால் சமூகத்துக்கு அழிவும் ஆபத்துகளும் அனர்த்தங்களும் தான் நிறைந்திருக்கும்.

கல்வியாக நாம் தேடுகின்ற கல்வி அமைய வேண்டும். அநியாயத்தை அடக்குமுறைகளை தட்டிக் கேட்கின்ற, விமர்சிக்கின்ற, தர்க்க ரீதியான பார்வையை அது எமக்கு தர வேண்டும். புதிய கருத்துக்களை புதிய சிந்தனைகளை புதிய முடிவுகளை புதிய ஆய்வுகளை நோக்கி எம்மை இட்டுச் செல்லக்கூடிய உந்து சக்தியாக கல்வி அமைய வேண்டும். வெறுமனே மனப்பாடம் செய்து பரீட்சைகளில் கொட்டுகின்ற கல்வியாக, தகவல்களாக அவை அமையக்கூடாது. கல்வி எம்மில் மிகச்சிறந்த நடத்தை மாற்றத்தை கொண்டு வருகின்ற பொழுதே சமூகம் அதன் பாட்டில் இயல்பாக தானாக உயர்ந்த ஒரு இடத்தை நோக்கி மாறிக் கொண்டே இருக்கும். அத்தகைய தரமான கல்விதான் இன்றைய வளரிளம் சமூகம் எதிர்பார்க்கின்ற, வேண்டி நிற்கின்ற கல்வியாக இருக்கும்.






நாச்சியாதீவு பர்வீன்

# "சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள்"
# விமர்சனப் பார்வை

(அஸ்ரபா நூர்மீன்)

சகோதரர் Ashraff Shihafdeen அவர்களது "சுவர்களில் உருவாகும் சுவர்க்கங்கள் " கவிதை நூலை தோழி ரஹீமா எனக்கு அன்பளிப்பாக அனுப்பியிருந்தார்.

இதனை வாசிக்க நான் ஆவலுடன் இருந்தேன்.நன்றி ரஹீமா.

இதனை அனுப்புவதற்கு முன்னர் தொலைபேசியில் உரையாடியபோது

இந்த நூலில் உள்ள கவிதைகள் பற்றி மிகவும் பாராட்டிப் பேசினார்

அது உண்மைதான்,

சகோதரர் யுளாசயகக ஞாாையகனநநெ அவர்களுடைய நூல்களில் ஒரு தனித்துவம் இருக்கிறது. அதனைப்படிக்க முன்னர் நூலின் வடிவம், நேர்த்தி, கையடக்கம், எழுத்துக்கள் என்பன ரசிகர்களை முதலில் கவர்கிறது.

அதன் உள்ளடக்கம் பெறுமதியான வார்த்தைகளால் மலர்ந்திருக்கும்

நிஜங்கள் பல கண்முன் நிழலாடும்

வாழ்வியலின் பல நெருடல்கள் லாவகமாக உருவாகி இருக்கும்

சில அசிங்கங்கள் கேலியுடனான அடிகளாய் விழுந்திருக்கும்

கவிதைகளுக்கான தலைப்புக்களோடு

அது இணங்கி இருக்கும். இப்படிப் பல சிறப்புகளால் நூல் செழுமை பெற்றுள்ளது.

அவரது பல கவிதைகளுக்கு நான் நீண்ட கால ரசிகை.

என்னைத் தீயில் எறிந்தவள்

தேவதைகள் போகும் தெரு கவிதைத்தொகுதிகளும்

மற்றும் வெய்யில் மனிதர்கள் என்பவற்றையும் அவரிடம் இருந்து பெற்றுக் கொண்டேன்.

இந்த நூலிலும் பல சிறந்த கவிதைகள் உள்ளன.

நாட்டில் ஏற்பட்ட மறக்க முடியாத சில துயரங்களின் ரணங்களை கவிவரிகள் மூலம் ஆவணப்படுத்தியுள்ளார். இதில் 50 கவிதைகளும் கடைசிப் பக்கத்தில் 8 குறும்பாக்களும் உள்ளன.

முதுமைப்பேறு எனும் தலைப்பிலுள்ள மரபுக் கவிதை நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அது என்னை மிகக் கவர்ந்த பாவாகிற்று

இங்கு ஒரு கவிதையைப் பதிவிடுகிறேன்.

தலைப்பு: நியாயங்கள்
எனக்குரிய நியாயங்களை
நான் என்னிடம் வைத்திருக்கிறேன்
உங்களுக்குரிய நியாயங்களை
நீங்கள் உங்களிடம் வைத்திருங்கள்
எனது நியாயங்களே நியாயம் என
எனக்கு ஆதரவாகச் சிலரும்
உங்களது நியாயங்களே நியாயம்
என
உங்களுக்கு ஆதரவாகச் சிலரும்
எப்போதும் நியாயம் சொல்வதற்குத்
தயாராகவே இருப்பார்கள்
சில வேளைகளில்
நியாயம் என்பது என்னிடம்
அல்லது உங்களிடமோ இருந்து
விடலாம்
பெரும்பாலும்
இருவரும் சம்பந்தப்படாத
ஒரிடத்தில் அஃது அநாதையாகக்
கிடக்கும் வாய்ப்பே அதிகம் !

***

கவிதைகளுக்கு அப்பால் மனதைத் கவர்ந்த அணிந்துரை இந்நூலை அழகு படுத்துகிறது

கவிஞரும் நாவலாசிரியருமான தீரன் ஆர்.எம்.நௌஷாத் இதனை 2008ஆம் ஆண்டு தனது நூல்வெளியீட்டின் போது வாசித்ததாக நூலாசிரியர். குறிப்பிடுகிறார் .அதில் சில வரிகள்.

எண்ணமும் எழுத்தும்
(அணிந்துரை)

தமிழ்வாள் சுழற்றி- ஒரு
பட்டாம் பூச்சியில் ஏறி வந்து




இவர் வீசிய வரிகளில்
மருத நிலமெல்லாம் மணத்தன
தமிழ்க் கதவுகளின்
கவிதைக் குமிழ் திருகித் திறந்து
பளிச்சென்று வெளிச்சம் விழச்
செய்த
எழுத்து விஞ்ஞானி இவர்
சுருக்கென்று குத்தும்- இவரது
குண்டூசி வரிகள் நறுக்காகச் சில
நேரம்
நண்டூரிச் செல்வதுண்டு
சிக்கென்று சிறைப்பிடித்த இவரது
இவரது சிறுமா வரிகள்
விழிகளை வியப்புக் குறியில்
கொழுவி விடுகின்றன

மின்மினித் தமிழ் தொட்டு
சூரியப் பிரகாசம் செய்வதும்
பேனையில்லை எனினும்
வானவில்லைப் பிடித்துத்
"தீர்க்க வர்ணம் " காட்டிவிடுவதும்
இவரது தமிழியல்பு

இவ்வாறு இன்னும் பல வரிகளுடன் கவிதாமணம் பெறும் அணிந்துரை ஆசிரியரின் படைப்புகளை

நறுக்கென்று நவில்கிறது

முன்னட்டை கணினி வடிவமைப்பில் ஆசிரியரின் தோற்றத்தை அலங்கரித்துள்ளது. இதனை எம்.கே.எம்.ஷகீப் அழகுற வடிவமைத்துள்ளார்.



# பல நிறங்களின் நீட்சி

எல்லையற்ற குதூகலத்துடன்
பல வண்ணக் கனவுகள் குழைத்து
அவளது வாசலில்
விளையாடுகிறாள் சிறுமி
பறவை ஒன்று அவள் முன்னால்
குதித்து நிற்கின்றது
அதன் சிறகசைப்பும்
அதன் நிறங்களும்
சிறுமிக்கு பிடித்துப் போனது
அவள் பறவையுடன் பேச விரும்பினாள்
எனினும் அவளுக்கு
பறவையின் மொழிதெரியாது என்பதால்
மிகுந்த பதட்டத்தோடு நிற்கின்றாள்
பறவை சிறுமியிடம் பேசியது
அவளும் பேசினாள்
பல நிறங்களின் நீட்சியில்
சிறுமி திளைத்தாள்
இக்காட்சி நிகழும் தருணம்
சிறுமியின் தலைக்கு மேலால்
பறவை செல்வதாய் கவிதை முடிகிறது

- ஏ.நஸ்புள்ளாஹ் -

6ம் பக்கத் தொடர்ச்சி....

நடந்து கொண்டிருப்பதாக மத்திய கிழக்கை உற்றுநோக்கும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

லெபனானில் தாக்குதல் நடத்தினால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் –இஸ்ரேலுக்கு ஈரான் எச்சரிக்கை!இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் பகுதியான கோலன் ஹைட்ஸ் பகுதியில் நிகழ்த்தப்பட்டுள்ள வான்வழித் தாக்குதல்களில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்கள் அனைவரும் குழந்தைகள் உள்ளிட்ட இளம் பருவத்தினர் என்று தெரிய வந்துள்ளது.இஸ்ரேலின் கோலன் ஹைட்ஸ் பகுதியில் நிகழ்த்தப்பட்டுள்ள தாக்குதல் இஸ்ரேலில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், லெபனான் நாட்டிலிருந்து செயல்பட்டு வரும் ஈரான் பின்புலத்திலுள்ள ஹிஸ்புல்லா படைகள் இந்த கொடூர தாக்குதல்களை நிகழ்த்தியிருப்பதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால், இந்த தாக்குதலுக்கு தாங்கள் பொறுப்பேற்க முடியாதென ஹிஸ்புல்லா மறுப்பு தெரிவித்துள்ளது.காஸாவின் மத்திய பகுதியில் அகதிகள் தங்கவைக்கப்பட்டிருந்த பள்ளியில் இஸ்ரேல் ராணுவம் சனிக்கிழமை(ஜூலை 27) நடத்திய வான்வழித் தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர். இஸ்ரேலின் இந்த தாக்குதலுக்கு பதிலடியாகவே கோலன் ஹைட்ஸ் பகுதியில் தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. தெற்கு லெபனானில் இஸ்ரேல் நிகழ்த்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா படையை சார்ந்த 4 பேர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இஸ்ரேலின் கோலன் ஹைட்ஸ் பகுதியிலுள்ள மஜ்தல் ஷாம்ஸ் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இஸ்ரேலில் ஹமாஸ் படைகள் நிகழ்த்திய தாக்குதல்களில் 1000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து இஸ்ரேலில் நிகழ்த்தப்பட்டுள்ள கொடூர தாக்குதல் இதுவாகும் என இஸ்ரேல் கண்டனம் தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து பதிலடியாக லெபனான் எல்லைகளை குறி வைத்து இஸ்ரேல் தாக்குதல்களை தொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலில் நிகழ்த்தப்பட்டுள்ள தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது பயணத்தை முன்கூட்டியே முடித்துக்கொண்டு நாடு திரும்பவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் திரும்பியவுடன் அவரது தலைமையில் பாதுகாப்பு கேபினட் கூட்டம் நடைபெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கொடூர தாக்குதலுக்கு பதிலடி தராமல் விடமாட்டோம், இந்த தாக்குதலுக்கு ஹிஸ்புல்லா கடும் விலை கொடுக்க நேரிடும் என நெதன்யாகு எச்சரித்துள்ளதால் காஸ ாவை தொடர்ந்து லெபனான் எல்லையிலும் போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக கிழக்கு லெபனானின் டாரய்யா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் டிரோன் மூலம் தாக்குதல் நடத்தியிருப்பதாக இஸ்ரேல் ராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த நிலையில், லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என இஸ்ரேலை ஈரான் எச்சரித்துள்ளது.

இஸ்ரேலிய ராணுவம் அத்து மீறல்கள் நடவடிக்கையை நாகரீகமான சமூகத்தில் உள்ள மக்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று துருக்கி அதிபர் ஏர்டோகன் தெரிவித்து உள்ளார். துருக்கி ஒரு இராணுவ வல்லரசு என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ராணுவ வீரர்கள் மற்றும் தளவாடங்கள் தயாரிப்பில் துருக்கியின் ராணுவ பலம் என்ன என்பதை இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரச தலைமை நன்கு அறிந்து உள்ள நிலையில் துருக்கியின் கருத்துக்கள் அத்தனை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்கிறது.

தனித்துவமாக போர் விமானங்களை தயாரிக்கும் ஆற்றல் வாய்ந்த நாடுகளில் ஒன்றாக மாறி இருக்கும் துருக்கி ஹமாஸ் இயக்கத்தினருக்கு ஆதரவாக பாலஸ்தீன பிரதேசத்தில் நுழைந்து யூத ராணுவத்திற்கு எதிராக போரில் ஈடுபட போவதாக அறிவிப்பு செய்து உள்ளது தான் மிகுந்த பதட்டத்தை தற்போது ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில் ஏர்டோகன் தெரிவித்து உள்ள இந்த அறிவிப்புக்கு கண்டனம் தெரிவித்து உள்ள இஸ்ரேலிய ராணுவ தலைமை ஈராக் நாட்டின் முன்னாள் அதிபர் சதாம் /ஹுசைனுக்கு ஏற்பட்ட மோசமான கதிதான் ஏற்படும் என்று கூறி உள்ளது.. அதே சமயம் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரசின் நடவடிக்கைகள் பொதுமக்களை படுகொலை செய்து வரும் நிலையில் நாஜிக்களுக்கு ஏற்பட்ட அழிவுகள் தான் ஏற்படும் என்று துருக்கி தெரிவித்து உள்ளது . அதாவது ஹிட்லருக்கு ஏற்பட்ட அதே கதிதான் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரசின் தலைமைக்கு ஏற்படும் என்பதே அந்த எச்சரிக்கையாக இருக்கிறது.

குறிப்பாக லிபியா மற்றும் அசர்பைஜான் பிராந்தியம் மீது நமது ராணுவம் நுழைந்தது போன்று இஸ்ரேல் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறியுள்ளார். துருக்கியின் இந்த அறிவிப்பு இஸ்ரேலில் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. துருக்கி அமெரிக்காவின் நேட்டோ அமைப்பில் உறுப்பினராக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் போர் மேகங்கள் முழுமையாக சூழ்ந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவுசார் தளத்தின் ஆளுமைகள் உடனடியாக அவசர கூட்டத்தை கூட்டி யுள்ள நிலையில் ஒட்டு மொத்த சர்வதேச நாடுகளையும் பதட்டத்தில் ஆழ்த்தியுள்ளது என்பதே உண்மையாகும்.

இதற்கு மிகவும் முக்கியமான காரணியாக இருப்பது ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலை. இரண்டாவதாக ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தலைவர் ஃபுவாத் சுக்ர் படுகொலை தான். இந்த படுகொலை ஈரான் மண்ணில் நடைபெற்ற நிலையில் ஈரான் இதற்கு எந்தவொரு நிலையிலும் பழி வாங்கியே ஆக வேண்டும் என்கிற சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு விட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே, தான் இஸ்ரேலிய அதிபர் பெஞ்சமின் நிதான்யாகு என்கிற ஒரு தனி மனிதனின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற நடக்கும் இந்த போர் குறித்த கவலைகள் எல்லோருக்குமே ஏற்பட்டுள்ளது.

இத்தனை தலைவர்கள் கொன்று குவித்து விட்ட பிறகும் இன்று பாலஸ்தீனத்தில் பொது மக்கள் 15 பேரை குண்டு வீசி கொலை செய்து விட்டு மீண்டும் மனித உரிமைகள் பற்றி நியாயம் பேசும் யூதர்களிடம் நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பு நிலவுவது அறிவுக்கு விதிக்கப்பட்ட தடை என்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதே உண்மையாகும்.....!

## ஜனாதிபதித் தேர்தல்;

# கட்டுப்பணம் செலுத்தியவர்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரிப்பு

(ஐ. ஏ. காதிர் கான்)

2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இது வரை 14 வேட்பாளர்கள் தமது கட்டுப்பணங்களை வைப்பிலிட்டுள்ளதாக, தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, ஒஷல ஹேரத், ஏ.எஸ்.பி. லியனகே, சஜித் பிரேமதாஸ, பீ. டபிள்யூ.எஸ். கே. பண்டாரநாயக்க, விஜயதாஸ ராஜபக்ஷ, கே.கே. பியதாச, சிறிதுங்க ஜயசூரிய, அஜந்த டி. சொய்சா, கே. ஆனந்த குலரத்ன, சரத் மனமேந்திர, வணக்கத்துக்குரிய பத்தரமுல்லை சீலரத்ன தேரர் மற்றும் அக்மீமன தயாரத்ன தேரர் ஆகியோர் தமது கட்டுப்பணங்களை வைப்பிலிட்டுள்ளனர் என, தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

# சுயாதீன ஊடகவியலாளர் போரத்தினால் கௌரவிப்பு



(எம்.பஹுத் ஜுனைட்)

காத்தான்குடியை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் 2024 / 2025 ஆம் வருடத்திற்கான பொதுக்கூட்டம் அண்மையில் (28) மூன் ஹொலிடே தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இதன் போது தேசிய மட்டத்தில் சாதனை படைத்த உறுப்பினர் என்.எம்.எம்.பாயிஸ் மற்றும் க.பொ.த உஃத கணித பிரிவில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள போரத்தின் உறுப்பினரின் புதல்வர் எம்.ஏ.அர்சாக் அகமட் ஆகியோருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அக்கறைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம் அன்சார் (நளீமி) பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இப்பொதுச் சபை கூட்டத்தில் சுயாதீன ஊடகவியலாளர் போரத்தின் புதிய நிருவாக சபை தெரிவு இடம்பெற்றது அதனடிப்படையில் ஊடகவியலாளர்களான எம்.ஏ.சீ. எம்.ஜெலீஸ் தலைவராகவும் எம்.எச்.எம்.அன்வர் செயலாளராகவும் எம். அப்துர் ரஹ்மான் பொருளாளராகவும் 13 பேர் கொண்ட நிருவா சபையும் தெரிவு செய்யபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு விழா






(பீ.எம்.முக்தார்)

பேருவளை மருதானை அல் - பாஸியதுல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலய ஸ்மார்ட் வகுப்பறை திறப்பு விழா அதன் அதிபர் மஸ்னவியா மூசீன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

களுத்துறை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எச்.பி.பீரிஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், முன்னாள் பேருவளை கோட்டக்கல்வி பணிப்பாளர் ஏ.ஜே.யு.சோமரத்ன, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம். இல்யாஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

களுத்துறை கல்வி திணைக்களத்தினதும் பாடசாலையின் பழைய மாணவியர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஆகியோரின் பங்களிப்புடன் இந்த ஸ்மார்ட் வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் களுத்துறை கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.இல்யாஸ், முன்னாள் பேருவளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.யு.சோமரத்ன ஆகியோரின் சேவைகளை கௌரவித்து நினைவு சின்னம் வழங்கப்பட்டதோடு, ஸ்மார்ட் வகுப்பறையை பெற்றுக் கொடுத்தமைக்கும் அவர் பழைய மாணவியர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் வலயக் கல்வி பணிப்பாளர் ஆகியோருக்கு அதிபர் நன்றிகளை கூறிக்கொண்டார்.

# மூன்று நிறங்களாக மாறும் கடவுச்சீட்டுக்கள்

( ஐ. ஏ. காதிர் கான் )

புதிய அம்சங்களைக் கொண்ட இலங்கைக் கடவுச்சீட்டுக்கள், 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் வழங்கப்படும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சாதாரண, உத்தியோகபூர்வ மற்றும் இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் என மூன்று வெவ்வேறு நிறங்களில் வழங்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# அனுராதபுரத்தில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்

(எம்.ரீ.ஆரிப்)

அனுராதபுரம் பிரதேசத்திலுள்ள நான்கு பொலிஸ் பகுதியில் கடந்த 30 மற்றும் 31ம் திகதிகளில் ஐந்து சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அதன்படி பரசன்கஸ்வெவ பொலிஸ் பகுதியில் 16 வயதுடைய சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தையின் 39 வயதுடைய சகோதரன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 50 வயதுடைய சந்தேக நபரொருவரை கைது செய்வதற்கு பரசன்கஸ்வெவ பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில் கலாதிவுல்வெவ பொலிஸ் பகுதியில் வசித்து வரும் 14 வயதுடைய சிறுமியொருவரை ஏமாற்றி பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 25 வயதுடைய சிறுமியின் காதலனை கலாதிவுல்வெவ பொலிசார் கைது செய்துள்ளனர்.

இதேவேளையில் தம்புத்தேகம பொலிஸ் பகுதியில் 14 வயதுடைய சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமி கல்வி பயிலும் பாடசாலை அதிபர் உட்பட மூவரை கைது செய்வதற்கு பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளதுடன். அதே பொலிஸ் பகுதியில் 15 வயதுடைய சிறுமியோருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 17 வயதுடைய சிறுவன் ஒருவனை தம்புத்தேகம பொலிசார் கைது செய்துள்ளனர்

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதி மன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பாளராக நாமல் நியமனம்

(எம்.ரீ.ஆரிப்)



அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ள நிலையில் அந்த மாவட்டத்திற்கு புதிய தலைவர் ஒருவரை நியமிக்கும் வரைக்கும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

(பரீட் இக்பால்)

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டும், பழைய மாணவர்களுக்கான கூட்டம் 11-08-2024 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு மஹ்மூத் மண்டபத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பழைய மாணவர்களுக்கான பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பழைய மாணவர்களும் அழைக்கப்படுகின்றீர்கள்.

புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் நடைபெறவிருக்கின்றது என ஒஸ்மானியா கல்லூரி அதிபர் என்.எம்.சாபி தெரிவித்தார்.

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள் பாராட்டி கௌரவிப்பு

(எம்.எம்.ஜெஸ்மின்)

அண்மையில் இடம்பெற்று முடிவடைந்த க.பொ.த (சாஃத) – 2024 தொகுதி மாணவர்களுக்கான கிழக்கு மாகாண மட்ட கணிப்பீட்டு பரீட்சையில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவிகளில் அனைத்து பாடங்களிலும் 09"யு" மற்றும் 08"யு சித்திகளை பெற்றவர்களை கௌரவித்து முன்னேற்ற அறிக்கை வழங்கி வைக்கும் நிகழ்வு பகுதித்தலைவி எம்.ஜ. ஸிபா தௌபீக் தலைமையில் சேர் ராஸிக் பரீட் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் கலந்து கொண்டார்.

தரம் – 11 பிரிவு மாணவிகள் அண்மையில் இடம்பெற்ற மாகாண மட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி, சைபர் லோவட பியாபத் நிகழ்ச்சித் திட்டத்தில் இணைய வடிவமைப்பு, தேசிய வாசிப்பு மாதம், வலய மட்ட ஆங்கில மொழி மற்றும் நடகம் போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவிகளுக்கும் இதன் போது சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.



## மனநலமும் ஆலோசனையும் 42



# மற்றவர் மகிழ்ச்சியில் நான்?

– மற்றவர்களின் வெற்றியில் மகிழ்ச்சி காண்பவரை நீங்கள் கண்டதுண்டா?

– மற்றவருக்கு ஒரு நலவு நடக்கும் போது அவரை ஊக்கப்படுத்தி உற்சாகம் தந்து தானும் அந்த சந்தர்ப்பத்தை அனுபவிக்கும் மனிதரை பார்த்ததுண்டா?

– அல்லது மற்றவர்களின் வெற்றியை கொண்டாடுவதில் ஏதோ விதத்தில் விருப்பம் காட்டும் மனிதரை கண்டதுண்டா?

இப்படியான ஒரு மனிதராக நீங்கள் இருந்தால் உணர்ச்சி முதிர்ச்சியடைந்த ஒரு சிறந்த மனிதராக நீங்கள் இருக்கிறீர்கள் என்பது தான் இதன் உண்மையாகும்.

வாழ்க்கையில் சற்று நேரத்திற்கு நாம் நம்முடைய சொந்த நலன்களை ஒதுக்கி வைத்துவிட்டு, வேறொருவருக்காக உண்மையாகவே மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பது ஒரு சாதாரண விடயம் அல்ல. அது ஒரு உயர்வான மனிதக் குணமாகும். இந்த குணம் உள்ளவராக நீங்கள் இருந்தால் சமூக நலத்திற்கும் அதன் இருப்பிற்கும் கைகொடுக்கும் பரந்த மனம் பெற்றவராக நீங்கள் இருப்பீர்கள்.

இருப்பினும், ஆழ்ந்த சுயநலவாதிகள் பெரும்பாலும் இந்த விடயத்தில் விருப்பம் காட்டவே மாட்டார்கள்.

– அவர்கள் மற்றவர்களின் சாதனைகளை குறைத்து மதிப்பிடுவார்கள்.

– மற்றவர்களின் வெற்றியின் போதும் அடைவின் போதும் தங்கள் கவனத்தைத் திருப்பிக் கொள்வார்கள். அல்லது

– மற்றவர்களின் வெற்றியால் ஒருவிதமான மன அச்சுறுத்தலுக்கு உள்ளாவார்கள்.

இந்த நடத்தை ஒரு பக்குவமற்ற மனநிலையிலிருந்து உருவாகிறது. சமூக உணர்வு இல்லாத மனதில் இருந்துதான் இந்த குணம் தோன்றுகிறது.

இந்த இடத்தில் இவர்கள்

– வேறொருவருக்கு கிடைத்த ஆதாயத்தை தங்கள் இழப்பாக உணர்கிறார்கள்.

– வேறொருவரின் ஆறுதலை தங்களுக்கு பாரமாக நினைக்கின்றார்கள்.

– மற்றவர்களின் வெற்றியை தனித்தன்மையாக பார்க்க விரும்பாதவர்களாக தம்மை ஆக்கிக்கொள்கிறார்கள்.

இப்படியான மனிதர்கள் இந்த சமூகத்தில் இருப்பது கண்டு நீங்கள் பல சந்தர்ப்பங்களில் மனம் கலங்கிப் போயிருப்பார்கள்.

நன்கு படித்து பட்டம் பெற்றவர்களிடம் இந்த அசிங்கமான குணம் இருப்பதை காணும் போதெல்லாம் உங்கள் மனம் ஒரு கனம் ஆடி அசைந்து போயிருக்கும்.

மற்றவர்களின் வெற்றிகளை ஏற்றுக் கொள்ளவும், அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து, பாராட்டி, பிரார்த்தனை செய்யவும் தவறிய ஒருவரை நீங்கள் கவனித்தால் அல்லது அவர்களின் வெற்றிகளை மறைக்க முயற்சிக்கும் ஒருவரை நீங்கள் கண்டால் ஆழ்ந்த சுயநலத்தின் அடையாளம் அங்கு வெளிப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

– எம் ஒவ்வொருவரின் பயணமும் தனித்தன்மை வாய்ந்தது.

– எம் ஒவ்வொருவரின் வெற்றியும் தனித்துவமானது.

– எம் ஒவ்வொருவரின் அடைவும் மகிழ்ச்சியும் அவரவருக்கு சொந்தமானது.

– எம் ஒவ்வொருவரிடமும் தனித்துவமான ஆற்றல்கள் உண்டு.

– எங்களுக்கே உரித்தான திறன்கள் உண்டு.

எல்லோருக்கும் ஒரேவிதமான ஆற்றல்கள் இருந்ததால் இந்த உலகம் ஒருபோதும் சரியாக இயங்காது.

ஒவ்வொரு மனிதனின் தனித்துவமான திறன்கள் வளமான சமூகத்தை உருவாக்க கட்டாயம் தேவை என்பதை நாம் உணர வேண்டும். ஒவ்வொருவரின் ஆற்றல்களையும் அவ்வாறே அவரவர் அடையும் சந்தோசங்களையும் மதிக்கும் மனிதர்களாக நாம் எல்லோரும் இருக்க கடமைப்பட்டு இருக்கிறோம். அப்போது தான் பலதரப்பட்ட ஆற்றல்களால் செழிப்புற்ற மனிதர்கள் வாழும் சமூகத்தை கட்டியெழுப்ப கை கொடுக்கலாம். இந்த அழகான குணத்தால் பண்பட்ட மனிதராக நாங்கள் இருக்க இறைவன் எங்களுக்கு அருள் புரிய வேண்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




**பயாஸா பாஸில்**

## கடந்த வாரத் தொடர்ச்சி...

பாசம் உனக்கு தெரியாது..

ஆனால் அத அவ வெளிக்காட்டும் போது உங்கப்பா கட்டில்ல நகர முடியாம இருந்தாரு.

அவரு தான் அப்பானு அவ காலேஜ்க்கு ஸ்கூலுக்கு தெரியாத அளவுக்கு அவர் பிசி....

அப்பா கூட அங்க போகணும் இங்க போகணும்ங்கிற எந்த ஆசையும் நிறைவேறல..

அவ அப்பா கடைசி காலத்தில சும்மா இருந்தபோது அவர் பேசனது அவ கேட்க முடியல

ஏன்னா அவ வேறு வீட்டுக்கு போய்ட்டா ..

பாத்தியா வாழ்க்கைய ?

நீ உன் பொண்ணுக்கு அப்படி ஒரு வாழ்க்கைய கொடுத்துடாத

உன் மனைவிய அவளோட மகனுக்கு கடிதம் எழுத வச்சிடாத...

இன்னைக்கு மூணுவேளை சாப்பிட சம்பாதிச்சுட்ட.

நாளைக்கு மூணு வேளைக்கும் உனக்கு பிரச்சினை இல்லை.

இன்னும் சொல்லபோனா

நீ இப்ப உழைக்கிறது உன்னோட அடுத்த பத்துவருஷம் கழிச்சி செலவழிக்க போறதுக்குதான்..

அத கொஞ்சம் குறைச்சிக்கோ..

சீக்கிரம் வீட்டுக்கு வா.

பொண்டாட்டிகிட்ட புள்ளைககிட்ட பேசு...

அவங்களுக்கும் நீ நல்லா இருக்கும் போதே கொஞ்சம் நேரம் கொடு....

ஏன்னா அன்புக்காக காத்திட்டு இருக்கிறதும்...

ஒருத்தர காக்க வைக்கிறதும் ஒரு வாழ்க்கையா?

செய்வேனு நம்புறேன்.

ஏன்னா என்கிட்ட நல்லா பேசின பையன் தானே நீ...



# வாழ்வை அனுபவித்து வாழுங்கள்

உன் மனைவி மகள விட்டுடவா போற கடிதத்தை படித்து முடிந்தாள்.

அவள் முகம் ஒருவித பரபரப்பில் இருந்தது. நிமிர்ந்து அவனை பார்த்தாள்....

இரண்டு மிகப்பெரிய பலூடா ஐஸ்கீரிம் வந்திருந்தது.

அவள் மெதுவாய் தன் அலைபேசியில் இருந்து அவள் அம்மாவிற்கு போன் செய்தாள்.....

நான் தான்மா

ஏன் சும்மா பேசக்கூடாதா?

என்ன செய்ற...

அப்பா என்ன செய்றாரு... என பேசத்தொடங்கினாள்.

ஐஸ்கீரிம் கொஞ்சம் கொஞ்சமாய் உருகத் தொடங்கியது.... .

அவன் சிரித்தபடி சாப்பிட தொடங்கினான்.

இனிமே அப்படித்தான்..

இனி அங்கே அன்புக்காக காத்திருக்க அவசியமில்லை நேரில் நாம் செல்ல முடியாமல் இருந்தாலும் போன் மூலமாக தினமும் பேசி மகிழ்வோம். நம்மளுடைய சராசரி வாழ்க்கை 60 ஆண்டுகள் என்று வைத்துக்கொண்டு இன்று முதல் மகிழ்ச்சியுடன் வாழ்வோம்..!!!ட

வாழ்க்கையில் பணம்,கார்,வீடு, எல்லாம் வாழ்க்கையை வாழ்வதற்காக தான் ஆனால் இன்று அவற்றுக்காக வாழ்க்கையவே துளைத்துக்கொண்டிருக்கிரோம்

சிந்தியுங்கள் நண்பர்களே... உங்கள் வாழ்க்கை உங்கள் கட்டுப்பாட்டில் தான் உள்ளது... உங்கள் வாழ்க்கைக்கான மகிழ்ச்சியும் உங்களிடம் தான் உள்ளது...

வாழ்க்கைக்காக தான் பணம்... பணத்துக்காக வாழ்க்கையை இழந்து விடாதீர்கள்!

**(கயல் விழி)**



# ஸதகாவின் பரகத்

வாழ்வில் நல்ல விடயம் ஒன்றை செய்ய முன் ஸ தகா கொடுத்து விடுங்கள்..

ஏதோவொரு விடயம் வாழ்வில் நிகழவேண்டும் என்று ஆசைப்பட்டால் அதை எண்ணி ஸதகா கொடுத்துவிடுங்கள்..

ஒரு பயணம் செல்வதற்கு முன் பயணம் சிறப்பாக அமைய வேண்டும் எண்ணி ஸதாகா கொடுத்து விடுங்கள்..

பரீட்சை ஒன்றுக்கு செல்ல முன் ஸதகா கொடுத்துவிடுங்கள்.

பரீட்சை இலேசாக வர வேண்டும் என்று ஸதகா கொடுத்து விடுங்கள்..

நோய் ஒன்று ஏற்பட்டால் அது குணமாக வேண்டும் என்பதற்காக எண்ணி ஸதகா கொடுத்து விடுங்கள்..

நீங்கள் நினைத்த காரியம் நிறைவேறும் என்று இருந்தால் அதை எண்ணி நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஸதகா கொடுத்து விடுங்கள்...

ஸதாகா கொடுப்பதினால் பாதுகாப்பு , இறையருள் , மனநிம்மதி, பரகத், எண்ணங்கள் பூர்த்தி செய்யப்படல் என பலவிதமான நன்மைகள் ஏற்படுகின்றன.

**– பஹ்ரியா பாயிஸ் –**

# பிள்ளை வளர்ப்பென்பது பெருங்கலை



தன் பிள்ளைக்கு எந்த வேலையும் தெரியாது. எல்லாவற்றையும் நாங்களே செய்கிறோம் என்பதில் கர்வம் கொள்ளும் பெற்றோர்களைக் காணக் கிடைக்கிறது

இது கூடுதல் அன்பின் வெளிப்பாடென்றாலும் ஒரு பிள்ளையை எதுவுமறியாத கிணற்றுத் தவளைகளாக வளர்க்க வேண்டாமென்பேன்.

எந்த வேலையும் தெரியாது என்பது பெருமையல்ல மாறாக அது சிறுமை உங்கள் பிள்ளைகள் சிறுமைப்படுவதையா விரும்புகிறீர்?

எப்படியும் அந்த பிள்ளைக்கும் பொறுப்பு என்பதில் ஒரு துளியும் இருக்கப் போவதில்லை.

ஆளுமையற்ற ஒரு பிள்ளை என்பது சமுதாயத்தின் சாபக்கேடு தலைமுறைக்குப் பிடித்த இழுக்கு அந்தப் பிள்ளையால் எதையுமே தனியாக செய்ய முடியாது.

பெரும்பாலான நேரங்களில் அடுத்தவர் உதவிகளை அல்லது ஒப்புமையை நாடிக் கொள்வார்கள் அந்த வகைப் பிள்ளைகள் சுயமாக ஒரு முடிவையோ தேர்வையோ செய்ய முடியாதவர்கள் அதில் பல பிரச்சினைகளை சமாளிக்க வேண்டி வரலாம் தைரியம் என்பதில் கொஞ்சமும் இருக்காதுஇரகசியத் தொடை நடுங்கிகளாக இருந்து கொள்வர்

ஒரு வேலையோ செயலோ தெரியாத போது கற்றுக் கொள்ளுங்கள் பின்கற்றுக் கொடுங்கள்இங்கே பிறந்தவுடன் நடந்தவர்கள் யாருமில்லை.

பெற்றோரே உங்கள் பிள்ளைகளை சிலபோது விழவும் விடுங்கள் காயப்படவும் கடந்து வரவும் ஏற்றாற்போலப் பழகிக் கொள்ளட்டும்.

அவர்கள் எவ்வளவு மென்மையானவர்கள் என்றாலும் பரவாயில்லை வன்மைகளையும் கற்றுக் கொடுங்கள்.

ஏனெனில் இங்கிருப்பவை அனைத்தும் மென்மையானவையல்ல சிலதெல்லாம் அதி தீவிர வன்மையானவை தன் வேலைகளை தானே செய்து கொள்ள அனுமதியுங்கள் தவறட்டும் பின் திருந்தட்டும்.

எப்போதும் அப்பாச் செல்லம் அம்மாச் செல்லம் என்று தலையில் தூக்கி வைத்து ஆடாதீர்கள்.

அப்பா அம்மா இல்லாமல் கணவன் மனைவியாக அல்லது தனியாக குடும்பமாக வாழவும்அ நேர்ந்து விடலாம்.

விரும்பியதில் உள்ள தீமையையும்விரும்பாததில் உள்ள நலவையும் பிரித்தறிவித்துக் காட்டுங்கள். எங்கே பேச வேண்டும் எங்கே அமைதி வேண்டும். என்பதையெல்லாம் தெளிவு செய்யுங்கள்.

பின் விளைவறியாது கண்டதெற்கெல்லாம் ஆசைப்படும் குணங்களை அடியோடு அகற்றி விடுங்கள். அதுவே பல பின்விளைவுகளுக்கு காரணமாகிடலாம்.

**– பாத்திமா மிஸ்னா –**

# ரணிலின் அலையில் சிதறும் மொட்டு!



எம்.எஸ். அமீர் ஹுசைன்



ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு கடந்த 2024.07.06 ஆம் திகதி வர்த்தமாணி அறிவித்தல் மூலம் அறிவித்ததும் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா முதலாவதாக ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பற்ற ஜனாதிபதி வேட்பாளராக கட்டுப்பபணம் செலுத்தி உள்ளார். அதன்படி ஐ.தே.கட்சியை உள்ளடக்கியதாக தற்போது ஆளும் கட்சியாக இணைந்துள்ள ஏனைய கட்சிகளின் ஆதரவை திரட்டி மீண்டும் ஜனாதிபதியாக வருவதை இலக்காகக் கொண்டு ரனில் விக்கிரமசிங்கா களம் இறங்கி உள்ளார். அத்துடன் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்ற போது மஹிந்த ராஜபக்ஷவின் கோட்டையை கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த 92 பாராளுமன்ற உறுப்பினர்களும் ரனிலுக்கு ஆதரவளித்து அவரை ஜனாதிபதியாக வெற்றிபெறச் செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்த பொது ஜன பெரமுன உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து ரனில் ஆதரவு புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கவும் திட்டமிட் டிருப்பதாக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா அறிவித்துள்ளார்.

அதே நேரம் பொதுஜன பெரமுன கட்சியின் நிறைவேற்று குழுக் கூட்டம் கடந்த 2024.07.31 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவின் விஜேராம இல்லத்தில் நடைபெற்ற போது அனைவரும் எதிர்பார்த்த விடயம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்கும் கூட்டமாக அது அமையும் என்பதாகும். ஆனால் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை 2024.08.07 ஆம் திகதி அறிவிப்போம் என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் எதிர்பார்த்ததை விட தாமரை மொட்டு கட்சியனருக்கு ஏமாற்றத்தை கொடுப்பதாக அமைந்திருந்தது எனலாம். மஹிந்த ராஜபக்ஷவின் முகாமில் இருந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி 69 இலட்சம் வாக்குகளைப் பெற காரணமாக அமைந்த 145 உறுப்பினர்களில் 92 போர் மஹிந்தவின் சகவாசத்தை விட்டு பிரிந்து சென்று ரனிலோடு இணைந்து அவரது வெற்றிக்காக பாடுபட போகின்றனர் என்ற தகவல் காரணமாகவே இவ்வாறான சோகமான நிலை ஏற்பட காரணமாக அமைந்ததாக ரனில் ஆதரவு உறுப்பினர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

ஆனாலும் பொதுஜன பெரமுன கட்சியின் நிறைவேற்று குழுக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் ரனில் விக்கிரமசிங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளராக போட்டியிடுவதில்லை என்ற நிலைப்பாட்டை அறிவித்திருப்பதால் ரனிலுக்கு மொட்டு கட்சியின் ஆதரவு வழங்கப்பட மாட்டாது என்ற நிலைப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. அத்துடன் மொட்டுக் கட்சி அதன் தாமரை மொட்டு சின்னத்தில் தனியான வேட்பாளரை களம் இறக்கும் என்றும் தீர்மானத்திற்கு வந்திருக்கின்றது. ஆனாலும் அந்த வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவா? மஹிந்த ராஜபக்ஷவா அல்லது இரண்டு ராஜபக்ஷ க்களும் இல்லாமல் தம்மிக பெரேராவா என்ற கேள்விகள் எழுந்திருக்கின்றது. எவ்வாறாயினும் மொட்டு கட்சியின் 92 உறுப்பினர்கள் ரனிலோடு இணைந்து ஜனாதிபதியாக ரனிலை வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு வர காரணம் மொட்டு கட்சியின் ஜனாதிபதி அபேட்சகசர்களாக களம் இறக்க இருப்பவர்களில் நம்பிக்கை இழந்துள் ளமையாகும்.

இதற்கிடையில் ரனில் விக்கிரமசிங்கா தனித்து மொட்டை விட்டு புதிய பாதைணயை தெரிவு செய்து பணயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் மீண்டும் ஒரு முறை மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாட வேண்டும் என்ற வேண்டுகோளை பிரதி சபாநாயகத் அஜித் ராஜபக்ஷ ரனிலுக்கு விடுத்துள்ளார். எதுவானாலும் ராஜபக்ஷக் களுடனான இறுதி சந்திப்பு என்று கருதக்கூடிய சந்திப்பொன்று ஆகஸ்ட் 01 ஆம் திகதி இரவு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. தற்போதைய நிலையில் மஹிந்த ராஸபக்ஷ முகாமை விட்டு 92 உறுப்பினர்கள் ரனிலுக்கு ஆதரவளிக்க திடசங்கட்பம் பூண்டு ரனிலோடு கைகோர்த்திருப்பதால் எப்படியாவது அவர்களை தடுத்து நிறுத்த தேவையான முயற்சிகள் மஹிந்த, நாமல் மற்றும் பெசில் ராஜபக்ஷவின் தயவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கு ஏற்ற வகையில் நாமல் ராஜபக்ஷவிற்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டும் என்ற உடன்பாட்டில் ரனிலை மொட்டு கட்சியான பொதுஜன பெரமுன கட்சியின் சின்னத்தில் போட்டியிடச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறில்லாமல் ரனிலின் தனி வழி பயணத்தில் மாற்றம் இல்லாமல் போனால் மாற்று வழியாக பொதுஜன பெரமுன தம்மிக பெரேராவை ஜனாதிபதி அபேட்சகராக நியமித்து நாமல்லை அடுத்து வரும் பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமராக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனாலும் ரனிலுக்கு ஆதரவளிக்க முன்வந்திருப்பவர்களில் அதிகமான உறுப்பினர்களுக்கு இனிமேல் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப அரசியலோடு ஒட்டிக் கொண்டிருப்பதற்கு விருப்பம் இல்லாத நிலையில் இவ்வாறு தனி வழியை தேர்ந் தெடுத்திருக்கின்றனர். நிலைமை இவ்வாறிருக்க மாத்தறை மாவட்ட பொதுஜன பெரமுன கட்சிக்காரர்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரனிலை ஆதரிப்பதென்று பகிரங்கமாக கூட்டம் கூடி அறிவித்துள்ளனர். அவ்வாறே வரகாபொலை பிரதேச சபையின் பொதுஜன பெரமுன கட்சியின் 20 உறுப்பி னர்களும் மஹிந்தவை விட்டு ரனிலை ஆதரிக்க முன்வந்துள்ளனர். அத்துடன் ஏற்கனவே மாகாண சபை உறப்பினர்களாக இருந்த பொதுஜன பெரமுன மற்றும் முன்னைய ஐ.தே.க உறுப்பினர்கள் 116 பேரும் ஜனாதிபதி ரனிலுக்கு ஆதரவு வழங்குவதாக 31 ஆம் திகதி ரனில் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உறுதியளித்துள்ளனர். இவ்வாறான மஹித ராஜபக்ஷவின் மொட்டுக்கட்சி கோட்டை உடைந்து ரனில் ஆதரவு அணியாக மாறும் நிலை உருவாகி இருக் கின்றது. இது நாட்டில் புதிய ரனில் ஆதரவு அலையை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

இதனால் ராஜபக்ஷ முகாமான மொட்டு கட்சிக்கு தரமான அங்கீகாரம் பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை அறிவிப்பது ஒருபுரம் இருக்க கட்சியோடு ஒட்டிக் கொண்டிருந்தவர்களை கட்சியை உடைத்துக் கொண்டு வெளியே போகாமல் பாதுகாப்பதும் பெரும் சவாலாக மாறி வருகின்றது. மொட்டில் இருந்து ரனிலுக்கு ஆதரவு வழங்கும் அலை தேசிய மட்டத்தில் பரவ ஆரம்பித்தால் மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு மொட்டு அணிக்கு பாரிய பின்னடைவாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்நிலையில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் மத்திய நிறைவேற்று குழுவும் 2024.07.31 ஆம் திகதி கூடி ரனிலுக்கு ஆதரவு வழங்குதென்ற தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. இதில் நிமல் சிரிபால டி. சில்வா அணி ரனில் ஆதரவு அணியாகவும் தயாசிரி ஜயசேகர அணி சமகி ஜனபலவேகயவுடன் இணைந்து சஜித்தின் வெற்றிக்காக பாடுபடும் அணியாகவும் மாறி இருக்கின்றது.

அதுபற்றி சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயலாளராக இருந்த தயாசிரி ஜயசேகர தெரிவிக்கையில் ரனிலுக்கு ஆதரவு தெரிவிக்க முண்டியடித்துக் கொண்டு ஓடுபவர்கள் சாராய கடை அனுமதிப் பத்திரத்திற்கும் பணத்திற்கும் ரனிலின் பின்னால் ஓடுவதாக குற்றம்சாட்டி உள்ளார். அரசாங்கம் கடந்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் 1200 மதுபான கடை நடத்தும் லைசன் (அனுமதிப் பத்திரங்கள்) வழங்கி இருப்பதாக குற்றம் சுமத்துகின்றார். அதனால் தயாசிரி ஜயசேகர அணி எப்போதும் எதிரணியில் இருந்து எதிரணியை வெற்றிபெறச் செய்ய பாடுபடுவதாக கூறுகின்றார்.

நிலைமை இவ்வாறிருக்க ஸ்ரீ.ல.சு. கட்சியின் தலைவர் என்று கூறிக்கொண்டு வந்த முன்னாள் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவும் மைத்திரிபால சிரிசேனாவுடன் இணைந்து தேசிய ஜனநாயக முன்னணி என்ற அமைப்பில் ஜனாதிபதி அபேட்சகராக களம் இறங்கி இருக்கின்றார். அவரும் மைத்திரிபால சிரிசேனாவும் ஒரிஜினல் சுதந்திர கட்சி காரர்கள் என்றும் ஏனைய அனைவரும் இந்த தேர்தலில் விஜேதாச ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்ய ஒன்றுபட வேண்டும் என்றும் சூளுரைத்துள்ளார். அரசியல்வாதிகளில் பலருக்கு எதிராக ஊழல் வழக்குகள் இருப்பதால் அவர்கள் தம்மை காப்பாற்றிக் கொள்ள கட்சியை ரனிலுக்கு தரைவார்த்துவிட்டதாக விஜேதாச ராஜபக்ஷ வும் குற்றம் சுமத்துகின்றார். எவ்வாறாயினும் 2020 பொதுத் தேர்தலின் பின்னர் ஸ்ரீ.ல.சு. கட்சியின் வாக்குப் பலம் 14 இலட்சம் அளவிலாகும். துற்போதைய நிலையில் இந்த வாக்குகள் மூன்றாக உடைய இருக்கின்றன.

இவ்வாறான ஒரு நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்ட ஒரு வார காலப்பகுதிக்குள் 10 பேர் கட்டுப் பணம் செலுத்தி உள்ளனர். இவ்வாறு ஜனாதிபதி அபேட்சகர்களாக போட்டி இட இருப்பவர்களில் ரனில் விக்கிரமசிங்கா, சஜித் பிரேமதாசா, அநுரகுமார திசாநாயக்கா ஆகிய பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உட்பட புதிய முகங்கள் களத்தில் இறங்கி உள்ளனர். அபிநவ நிவஹல் பெரமுன, இலங்கை தொழிலாளர் கட்சி, தேசிய அபிவிருத்தி முன்னணி, தேசிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய சமூக உடமைவாத கட்சி, ருஹுனு ஜனதா கட்சி, என்ற அடிப்படையில் சில கட்சிகளில் இருந்தும் 03 சுயேட்சை குழுக்கள் என்ற பெயரிலும் கட்டுப்பணம் செலுத்தப் பட்டிருக்கின்றது. இதில் விமல் மற்றும் உதய கம்மம் பிள்ளை உட்பட சில அரசியல்வாதிகள் இணைந்ததாக புதிய கூட்டணியாக பிரபல வர்த்தகர் திலிப் ஜனவீரவும் ஜனாதிபதி அபேட்சகராக போட்டியிட இருக்கின்றார். இவர்களும் ராஜபக்ஷக்களின் மொட்டில் இருந்து கழன்ற ஒரு இதழாகும். இந்த அணியோடு இருப்பவர்கள் ஏற்கனவே கோதாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தேட இனவாதம், மதவாதம் பேசி அரசியல் பயணம் முன்னெடுத்தவர்களாவர்.

2022 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் இடம்பெற்ற அப்போதைய ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து கோதாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி பதவியில் இருந்தும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்தும் பெசில் ராஜபக்ஷ வை நிதி அமைச்சர் பதவியில் இருந்தும் விரட்டிய மக்கள் போராட்டம் என்ற அரகலய எழுச்சிக்கு அடிப்படையாக இருந்த அணிகள் ஒன்றிணைந்து ஜன அரகலய சந்தானய (மக்கள் போராட்ட கூட்டணி) என்ற அமைப்பின் ஊடாக சட்டத்தரணி நுவன் போபகேயை ஜனாதிபதி அபேட்சகராக களத்தில் இறக்கி இருக்கின்றது. இவ்வாறக ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடிக்க அரம்பித்திருக்கின்றது. இருந்தாலும் நாட்டில் மக்கள் மத்தியில் ரனில் விக்கிரமசிங்காவுடன் கைகோர்க்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பொதுஜன பெரமுன கட்சிக்காரர்கள் தொடர்பாக ஒருவிதமான அதிருப்தி நிலை காணப்படுகின்றது.

இவர்கள் அப்போதைய ஆட்சி காலப்பகுதியில் மஹிந்த மற்றும் கோதாபயவுடன் இணைந்து இருந்த காலப்பகுதியில் ஒன்றில் நாட்டை சூரையாடிய திருடர்கள் கூட்டம் அல்லது நாடு சூரையாடப்படும் வரையில் வாய் மூடி மௌனமாக பார்த்துக் கொண்டிருந்த இந்த நாட்டிற்கு துரோகம் இழைத்தவர்கள் என்று மக்கள் தூற்றிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய அரசியல்வாதிகள் காரணமாகவே நாடு பாரிய பொருளாதார சரிவுக்கும் பின்னடைவுக்கும் தள்ளப்பட்டது என்பதை மக்கள் மறக்கவில்லை. இவர்களை நம்பி 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் 2020 பொதுத் தேர்தலிலும் வாக்களித்தனர். ஆனாலும் மஹிந்த வாத மொட்டு கட்சி அரசியல்வாதிகள் நாட்டிற்கு துரோகம் செய்தவர்கள் என்ற அடிப்படையில் யாருக்கு வாக்களிப்பது, யாரை ஜனாதிபதியாக தெரிவு செய்வது என்று ஆளமாக சிந்தித்து வருகின்றனர்.

இத்தகைய திருடர்கள் கூட்ட அரசியல்வாதிகளை இனி ஒருபோதும் நம்ப முடியாது என்பதால் இவர்கள் ஓரங்கட்டப்பட வேண்டும் என்று கருதுகின்றனர். இவ்வாறு பார்க்கும் போது நாட்டை 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவுக்காவது மீட்டெடுத்தவர் என்ற நிலையில் ரனலை ஆதரிக்க தீர்மானித்தாலும் இதே திருடர்கள் கும்பள் மீண்டும் பழைய கைவரிசையை காட்டாமல் இருக்கும் என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. அதே நேரம் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சீ.விக்னேஷ்வரன் சில தினங்களுக்கு முன்னர் அவரது இல்லத்தில் நடத்தி சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பான தீர்மானம் அடுத்த வரம் அளவில் எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார். ஆனாலும் பரவலாக பார்க்கின்ற போது தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தரப்பில் அவ்வாறான பொது வெட்பாளர் தொடர்பான அபிப்பிராயம் இருப்பதாக தென்படவில்லை. அவ்வாறு தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பதாக இருந்தால் அதுவும் ரனிலின் வெற்றிக்காக மறைமுகமான பாதை அமைப்பதாகவே இருக்கும் என்று கருத முடிகின்றது.

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியான சமகி ஜனபலவேகய கட்சிக்கு தமிழர்கள் வாக்களிப்பதை தவிர்த்து அதன் தோள்விக்கு வழிவகுப்பதும் இவ்வாறாக பொது வேட்பாளரை களம் இறக்குவதன் பின்னணி நோக்கமாக இருக்கலாம். 2005 ஆம் ஆண்டு அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டதன் விளைவே அப்போதைய சந்தர்ப்பத்தில் ஐ.தே.கட்சியில் போட்டியிட்ட ரனில் தோள்விய டைந்ததும் மஹிந்த மிகக் குறைந்த 550.000 அளவான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்று ஜனாதிபதியாகிய வரலாறும் இருக்கின்றது. எவ்வாறாக இருந்தாலும் சிந்தித்து முடிவுகளை எடுப்பது தூரதிருஷ்டி எனலாம்.



அரபாத் பஹுர்தீன்



# பாரிஸ் ஒலிம்பிக்கில் தருஷியின் பதக்கக் கனவும் கலைந்தது

பாரிஸ் ஒலிம்பிக்கில் மகளிருக்கான 800 மீற்றர் ஓட்டத்தின் ரெபஷாஸ் சுற்றில் தருஷி கருணாரத்ன ஏழாவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்தப் போட்டி நேற்று சனிக்கிழமை பிற்பகல் 2.40 மணியளவில் ஆரம்பமானது. இந்த போட்டியை 2:06.66 நிமிடங்களில் தருஷி நிறைவு செய்தார்.

பாரிஸ் ஒலிம்பிக்கில் மகளிருக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் ஆரம்ப சுற்றின் போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில் அந்தப் போட்டியில் தருஷி கருணாரத்ன 8ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இந்த ஓட்டப் போட்டியை 2:07:26 நிமிடங்களில் தருஷி கருணாரத்ன நிறைவு செய்தார். இந்த போட்டியின் முதலாம் இடத்தை ஜமைக்காவின் நாடோயா கோலேவும், 02ஆம் இடத்தை அவுஸ்ரேலியாவின் கிளாடியா ஹோலிங்ஸ்வொர்த்வும், 03 ஆம் இடத்தை கென்யாவைச் சேர்ந்த லிலியன் ஒடிராவும் பெற்றுக்கொண்டனர்.

ஆரம்ப சுற்றின் ஒவ்வொரு போட்டியிலும் முதல் 03 இடங்களைப் பெற்றுக்கொள்ளும் வீரர்கள் அரையிறுதி சுற்றுக்கு நேரடியாக தேர்வு செய்யப்படுவர். இருப்பினும், ரெபஷாஸ் எனும் முறைமைக்கமைய அரையிறுதி சுற்றுக்கு நேரடியாக தெரிவு செய்யப்படாத வீரர்களுக்கு மற்றுமொரு வாய்ப்பு வழங்கப்பட்டது.பாரிஸ் ஒலிம்பிக்கில் மகளிருக்கான 800 மீற்றர் ஓட்டத்தின் ரெபஷாஸ் சுற்றில் தருஷி கருணாரத்ன ஏழாவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஆரம்ப சுற்றின் ஒவ்வொரு போட்டியிலும் முதல் 03 இடங்களைப் பெற்றுக்கொள்ளும் வீரர்கள் அரையிறுதி சுற்றுக்கு நேரடியாக தேர்வு செய்யப்படுவர். இருப்பினும், ரெபஷாஸ் எனும் முறைமைக்கமைய அரையிறுதி சுற்றுக்கு நேரடியாக தெரிவு செய்யப்படாத வீரர்களுக்கு மற்றுமொரு வாய்ப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச டென்னிஸ் அரங்கிலிருந்து விடைபெற்றார் ஆண்டி முர்ரே

சர்வதேச டென்னிஸ் போட்டியில் இருந்து இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரே ஓய்வை அறிவித்தார்.

நடப்பு ஒலிம்பிக் போட்டியுடன் சர்வதேச டென்னிஸில் இருந்து ஓய்வு பெறுவதாக ஆன்டி முர்ரே அறிவித்துள்ளார். 37 வயதாகும் பிரிட்டனைச் சேர்ந்த ஆன்டி முர்ரே இரண்டு முறை (2012, 2016) ஒலிம்பிக்கில் தங்கம் வென்றுள்ளார்.

2012இல் கலப்பு இரட்டையர் பிரிவில் வெள்ளியும் வென்றுள்ளார். விம்பிள்டன் போட்டியில் 2013, 2016 ஆண்டுகளிலும் 2012 அமெரிக்க ஓபன் தொடரிலும் சம்பியன் பட்டம் வென்றுள்ளார். அறுவைச் சிகிச்சை காரணமாக ஆடவர் ஒற்றையர் பிரிவில் இருந்து விலகிய ஆன்டி முர்ரே கலப்பு இரட்டையர் பிரிவில் மட்டுமே கலந்து கொண்டார்.

தற்போது பாரிஸ் ஒலிம்பிக் ஆடவர் இரட்டையர் காலிறுதிப் போட்டியில் டான் இவான்ஸ் உடன் சேர்ந்து டெய்லர், டாமி பால் இணையுடன் மோதினார். இதில் 2-6, 4-6 என செட்களில் ஆன்டி முர்ரே இணை தோல்வியுற்றது.

இதனைத் தொடர்ந்து தனது எக்ஸ் பக்கத்தில்,இனிமேல் டென்னிஸை விரும்பப்போவதில்லை எனக் கூறியுள்ளார். மேலும் தனது பயோவில் டென்னிஸ் விளையாடினேன் எனவும் மாற்றியுள்ளார். பார்வையாளர்களிடமிருந்து பலத்த கரகோஷம் கிடைத்தது. மக்களுக்கு நன்றி தெரிவித்து கையசைக்கும்போது ஆன்டி முர்ரேவின் கண்களில் கண்ணீர் கசிந்தது.

”தோல்விக்குப் பிறகு இது சிறப்பான முடிவில்லை. பதக்கம் வென்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் நான் சிறப்பாகவே உணர்கிறேன். போட்டி முடிந்த விதம் எனக்கு மகிழ்ச்சியே. ஒலிம்பிக்கில் பங்கேற்று எனது விருப்பப்படியே முடிந்தது மகிழ்ச்சி. ஏனெனில் கடைசி சில வருடங்களில் எதுவும் நிரந்தரமாக இருக்கவில்லை.” இவ்வாறு ஆன்டி முர்ரே தெரிவித்துள்ளார்.



# கிழக்குமண்ணில் கால்பதித்த வரலாற்றுச் சாதனையாளன் சஹ்மிக்கு வரலாறு காணாத மக்கள் வரவேற்பு!!

## சஹ்மி நெகிழ்ச்சி

(பீ.எம் முக்தார்)

இலங்கை நாட்டை நடைப்பவனியாக சுற்றிவரும் சாதனை முயற்சியை மேற்கொள்ளும் பேருவளையைச் சேர்ந்த சஹ்மி ஷஹீத் கிழக்கு மாகாணத்தில் கால்பதித்த போது ,வரலாறு காணாத மூவின மக்கள் திரளோடு வரவேற்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை(03) தனது சாதனைப் பயணத்தின் அடுத்தகட்டமாக, வடமாகாணத்தை நோக்கிய நடைப்பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இப்பாரிய வரவேற்பு பற்றி சஹ்மி ஷஹீத் தெரிவிக்கையில்,

”கிழக்கு மக்கள் இன, மத வேறுபாடின்றி எனக்கு வழங்கிய மாபெரும் வரவேற்பினை நான் என்றும் மறக்க மாட்டேன், உண்மையில் நான் இதுபோன்றவொரு வரவேற்பை எதிர்பார்க்கவும் இல்லை,என்னை சொல்லாலும் செயலாலும்.பொருளாலும்




ஊக்குவித்த அனைத்து மக்களுக்கும் என்றும் என் நன்றிகள், அதுமட்டுமல்லாமல் எனக்காக முழு செலவுகளையும் பொறுப்பேற்ற பேருவளை

அனுசரணையாளர் ,சிமி ஹோல்டிங் நிறுவன உரிமையாளர் இஜ்லான் யூசுஃப் அவர்கள்

சிமி ஹோல்டிங் உரிமையாளர் அல்ஹாஜ் இஜ்லான் யூசுஃப் அவர்களுக்கும் எனக்கான ஊடக அங்கீகாரங்களை வழங்கிய அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் என் சாதனைப் பயணத்திற்கு ஏதோ ஒரு வகையில் ஒத்துழைக்கும் அனைத்து மக்களுக்கும் என்றும் எனது மனமார்ந்த நன்றிகள்” எனக் கூறி நன்றி தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் துவங்கிய ஷஹ்மியின் சாதனைப் பயணம் ,காலி,மாத் தறை,ஹம்பாந்தோட்டை,மொனராகலை,அம் பாறை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களை வெற்றிகரமாக சென்றடைந்துள்ள நிலையில் ,அடுத்தகட்டமாக முல்லைத்தீவு கிளிநொச்சி, யாழ்ப்பாணம்,மன்னார்,அனுராதபுரம் ,புத்தளம்,கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டத்தை சென்றடையவுள்ளது.

சஹ்மியின் வருகையை எதிர்பார்த்து, வடமாகாண மக்களும் தயாராக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஷஹ்மியின் சாதனைப் பயணத்தின் இறுதிக் கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் பெரும் வரவேற்களிப்பட்டு, இறுதியில் களுத்துறை மாவட்டத்தில் கால்பதிக்கும் போது,அங்கிருந்து பேருவளை வரை ஆரவாரமான வாகனப் பேரணிகளோடு சஹ்மியை பேருவளை மன் வாரியனைத்து வரவேற்கவிருப்பதாக,பேருவளை பிரதேச இளைஞர்கள், வர்த்தகர்கள், விளையாட்டு கழகங்கள், நலன்புரி அமைப்புக்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

மற்றும் தன் சொந்த மண்ணான பேருவளை நகரில் கால்பதிக்கும் போது, பாரிய வரவேற்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாக ஷஹ்மியின் இப்பயணத்தின் பூரண

# வெண்டர்ஸேயின் சுழலில் சிக்கியது இந்தியா

## இலகு வெற்றியுடன் தொடரில் முன்னிலை பெற்றது இலங்கை



சுற்றுலா இந்திய அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் தீர்மானமிக்க 2ஆவது போட்டியில் ஜெப்ரி வெண்டர்ஸி சுழலில் இந்திய வீரர்களை அள்ளிச் சுருட்ட 32 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் பந்துவீச்சில் அசத்திய இலங்கை அணி போட்டியை சமநிலை செய்திருந்தது. இந்நிலையில் இன்றைய தினம் (4) தீர்மானமிக்க 2ஆவது போட்டி ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் இந்திய அணி மாற்றமின்றிக் களம் காண, இலங்கை அணியில் இரு மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தது.

வனிந்து ஹசரங்க காயம் காரணமாக தொடரிலிருந்து விலகிக் கொள்ள , அவருக்கு பதிலாக ஜெப்ரி வெண்டர்ஸியும், முஹம்மட் ணிராஸிற்கு பதிலாக கமிந்து மெண்டிசும் களம் கண்டனர். அதற்கமைய போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்திருந்தது. இதற்கமைய களம் நுழைந்த ஆரம்ப வீரரான பெத்தும் நிசங்க சிராஜின் முதல் பந்திலே டக் அவுட் ஆகி ஏமாற்றம் கொடுத்தார்.

இருப்பினும் மற்றைய ஆரம்ப வீரரான அவிஷ்க பெர்ணான்டோ 40 ஓட்டங்களையும், பின்வரிசை வீரரான கமிந்து மெண்டிஸ் 40 ஓட்டங்களையும், துனித் வெல்லாலகே 39 ஓட்டங்களையும், குசல் மென்டிஸ் 30 ஓட்டங்களையும் சேர்த்துக் கொடுக்க இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் வாஷிங்டன் சுந்தர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனால் இலங்கை அணி நிர்ணயித்த 241 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இந்திய அணிக்கு ஆரம்ப ஜோடியான ரோஹித் மற்றும் கில் ஜோடி அதிரடி தொடக்கத்தை கொடுத்தது. ஆறு மற்றும் நான்கு ஓட்டங்களை விளாசி மிரட்டிய ரோஹித் அரைச்சதம் கடக்க இந்திய அணி 97 ஓட்டங்களை பெற்றிருக்க முதல் விக்கெட்டாக ரோஹித் 64 ஓட்டங்களுடன் வெண்டர்ஸியின் சுழலில் சிக்கினார்.

பின்னர் 35 ஓட்டங்களுடன் களத்திலிருந்த கில்லை வெண்டர்ஸி பெவிலியன் அனுப்பியதுடன் , சிவம் துபேயை ஓட்டமின்றி ஆட்டமிழக்கச் செய்து மிரட்டினார். அடுத்த ஓவரில் 14 ஓட்டங்களை பெற்றிருந்த கோஹ்லியை ஆட்டமிழக்கச் செய்ததுடன், மத்திய வரிசை வீரரான ஸ்ரேயஸ் ஐயரையும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்த வெண்டர்ஸே ஒருநாள் அரங்கில் முதல் 5 விக்கெட் பிரதியை பெற்று அசத்தினார்.

அதனால் விக்கெட் இழப்பின்றி 97 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி 133 ஓட்டங்களுக்கு முதல் 5 விக்கெட்டுக்களையும் இழந்து தவித்தது. பின்னர் ராகுலும் வந்த வேகத்தில் வெண்டர்ஸியின் சுழலில் போல்ட் ஆக இலங்கை அணி வெற்றியை நெருங்கியது. இருப்பினும் ஒருபுறத்தில் அக்ஷர் படேல் நிலைத்து ஓட்டங்களை சேர்க்க மறுபுறத்தில் 15 ஓட்டங்களுடன் வாசிங்டன் சுந்தர் அசலங்கவின் சுழலில் சரணடைந்தார். நம்பிக்கை கொடுத்த அக்ஷர் படேல் 44 ஓட்டங்களுடன் அசலங்கவின் சுழலில் அவரிடமே பிடிகொடுத்து பெவிலியன் திரும்ப இலங்கையின் வெற்றி உறுதியானது.

பின்வரிசையில் வந்த சிராஜ் 4 ஓட்டங்களுடன் அசலங்கவினால் ஆட்டமிழப்புச் செய்யப்பட , இறுதி விக்கெட்டாக அர்தீப் சிங் 3 ஓட்டங்களுடன் ரன்அவுட் ஆக இந்திய அணியால் 42.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இதனால் இலங்கை அணி 32 ஓட்டங்களால் அசத்தல் வெற்றி பெற்று தொடரில் 1 போட்டி மீதமிருக்க 1:0 என முன்னிலை பெற்றது. போட்டியின் நாயகனாக 10 ஓவர்களில் 33 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டிய ஜெப்ரி வெண்டர்ஸே தெரிவானார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.